பக்கங்கள்: 22

# தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 03 புனல்:21 16.09.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



போர்க்குற்ற விசாரணை நடந்திருந்தால்

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்திருக்காது**

பக்கம் 04



**கிளிநொச்சியின் எதிர்காலம்**

கருணாகரன்

பக்கம் 10

# புதைகுழி சொல்லும் கதை என்ன?



வர்மா

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை எட்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது. வியாழக்கிழமை 5 உடற்பாக எச்சங்கள் மீட்கப்பட்டதாகவும் இதுவரை 14 உடற்பாக எச்சங்கள் மீட்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலே கடந்த 29.06.2023 அன்று தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரால் நீர்க் குழாய்கள் பொருத்துவதற்காக நிலத்தைத் தோண்டிய போது அங்கு மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் கடந்த செப்ரெம்பர் 9 ஆம் திகதி அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் நாளில் நான்கு உடற்பாக எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. முழுமையான எலும்புக் கூடுகள், துப்பாக்கி சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்கத் தகடுகள், உடைகள், சயனடைட் குப்பி, ரஷ்யத் தயாரிப்பான தண்ணீர் சுத்தி கரிக்கும் கருவி என்பன புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டன.

▶21








‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# சிங்கப்பூரின் ஜனாதிபதியான

# இலங்கைத் தமிழன்

# தர்மன் சண்முகரத்தினம்

வானதி

சிங்கப்பூரின் 9 ஆவது ஜனாதிபதியாக தர்மன் சண்முகரத்தினம் பதவி ஏற்றுள்ளார். ஊரெழுவைப் பூர்வீகமாகக் கொண்ட அவரது குடும்பம் பல வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூருக்குக் குடிபெயர்ந்தது. அவர் சிங்கப்பூரில் பிறந்து, வளர்ந்து, படித்து பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றார்.

தென்கிழக்கு ஆசியாவில் இருக்கும் குட்டி நாடு சிங்கப்பூர். இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையேகூட 60 இலட்சத்திற்குள்ளாகவே இருக்கும். தமிழர்கள் அதிகளவில் வசிக்கும் நாடுகளில் ஒன்றாக இருக்கிறது. சிங்கப்பூரின் அபரிமிதமான வளர்ச்சி உலக நாடுகளை ஆச்சரியப்படுத் தியது. சிங்கப்பூரின் ஜனாதிபதியாக இருந்த ஹலீமா யாக்கோப்பின் பதவிக் காலம் கடந்த 13 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. முன்னதாக புதிய ஜனாதிபதியத் தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. தர்மன் சண்முகரத்தினம், இங் கொக் சொங், டான் கின் லியான் ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டனர். தர்மன் சண்முகரத்தினமுக்கு 70.40% (1,746,427 வாக்குகள்) வாக்குகள் கிடைத்து மிகப்பெரிய வெற்றியைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இங் கொக் சொங் 15.72%, டான் கின் லியான் 13.88% வாக்குகள் பெற்றனர்.

66 வயதான தர்மன் சண்முகரத்தினம் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார். லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் படித்த இவர் சிறந்த பொருளாதார வல்லுநர்களில் ஒருவர் ஆவார். இவர் பொருளாதாரத்தில் முதுகலை ஆய்வுப் பட்டத்தை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். வழக்கறிஞரான இவரது மனைவி ஜேன் யுமிகோ இட்டோகி சீன-ஜப்பானிய வம்சாவளியைச் சேர்ந்தவர். அவர் சிங்கப்பூரில் சமூக நிறுவனங்களிலும் இலாப நோக்கற்ற கலைத் துறையிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்த தம்பதிக்கு ஒரு மகள், மூன்று மகன்கள் உள்ளனர்.

2001 ஆம் ஆண்டு சிங்கப்பூரின் ஜூரோங் தொகுதியில் இருந்து முதலில் எம்.பியாகத் தெரிவானார். அதன் பிறகு தொடர்ச்சியாக 2006, 2011, 2015, 2020 ஆகிய ஆண்டுகளில் வெற்றி பெற்று எம்.பியானார். அந்நாட்டில் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் இவர் 2015-2023 வரை சமூக கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் 2011 முதல் 2023 வரை சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் தலைவராகவும் 2011 முதல் 2019 மே மாதம் வரை சிங்கப்பூரின் துணைப் பிரதமராகவும் பணியாற்றியவர். பிரதமரின் ஆலோசகராகவும் செயற்பட்டார். சிங்கப்பூரில் இதுவரை சீனாவைச் சேர்ந்தவர்களே அதிக அளவில் ஜனாதிபதியாகத் தேர்வுசெய்யப்பட்டு வந்தனர்.

சிங்கப்பூரில் பெப்ரவரி 25, 1957 இல் பிறந்த தர்மன், 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சிங்கப்பூரர் ஆவார். இவர் பொருளாதார நிபுணர் மட்டுமில்லை. ஒரு நல்ல விளையாட்டு வீரர், கவிஞர் ஆவார்.

சிங்கப்பூரில் “நோயியலின் தந்தை” என்று அழைக்கப்படும் மருத்துவ விஞ்ஞானி எமரிட்டஸ் பேராசிரியர் கே.சண்முகரத்தினம், சிங்கப்பூரில் புற்றுநோய் பதிவேட்டை நிறுவியவர் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் நோயியல் தொடர்பான பல சர்வதேச அமைப்புகளுக்கு தலைமை தாங்கியவர். இவரின் மூன்று குழந்தைகளில் ஒருவர்தான் தர்மன்.

ஆங்கிலோ-சீனப் பள்ளியில் பயின்ற தர்மன் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் (LSE) இல் பொருளாதாரத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். (LSE பின்னர் 2011 இல் அவருக்கு கௌரவ பெல்லோஷிப்பை வழங்கியது). பின்னர் அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள வொல்ப்சன் கல்லூரிக்குச் சென்றார், அங்கு பொருளாதாரத்தில் முதுகலை தத்துவப் பட்டம் பெற்றார்.

பின்னர் அவர் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் ஹார்வர்ட் கென்னடி பள்ளியில் மாணவரானார், அங்கு அவர் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் (MPA) முடித்தார் மற்றும் Lucius N. Littauer Fellows விருதைப் பெற்றவர் (கல்வித் திறன் மற்றும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தும் MPA மாணவர்களுக்கு வழங்கப்பட்டது). தொழில் ரீதியாக ஒரு பொருளாதார நிபுணரான தர்மன், தனது பணி வாழ்க்கையை முக்கியமாக பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளுடன் தொடர்புடைய பொதுச் சேவையில் செலவிட்டார். அவர் பல்வேறு உயர்மட்ட சர்வதேச கவுன்சில்கள் மற்றும் பேனல்களுக்கு தலைமை தாங்கினார்.



ஜூன் 2023 இல், தர்மன் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக இருக்க விரும்புவதாக அறிவித்தார். ஜனாதிபதி பதவி ஒரு கட்சி சார்பற்ற அலுவலகம் என்பதால், அரசாங்கத்தின் அனைத்து பதவிகளிலிருந்தும் மற்றும் சிங்கப்பூரின் ஆளும் மக்கள் செயல் கட்சியின் (PAP) உறுப்பினர் பதவியிலிருந்தும் ஜூலை 2023 இல் இராஜினாமா செய்தார்.

1970 களில் இங்கிலாந்தில் படிக்கும் போது ஒரு மாணவர் செயற்பாட்டாளரான, தர்மன் முதலில் சோசலிஷ நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார். பொருளாதாரம் குறித்த அவரது கருத்துகள் அவரது பணி வாழ்க்கையின் போது உருவாகின.

1992 இல் MAS இன் பொருளாதாரத் துறையின் இயக்குநராகப் பணியாற்றியபோது, சிங்கப்பூரின் 1992 இரண்டாம் காலாண்டு ஃப்ளாஷ் GDP வளர்ச்சிக் கணிப்புகளை உள்ளூர் செய்தித்தாளில் வெளியிட்டது தொடர்பான வழக்கில், அதிகாரபூர்வ ரகசியச் சட்டத்தின் (OSA) கீழ் தர்மன் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கில் அவருக்கு 1,500 சிங்கப்பூர் டொலர் அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால், அதையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அவர் பொதுத் துறைக்கு சேவையாற்றினார் மற்றும் அரசாங்கத்தில் பல்வேறு அமைச்சர் பதவிகளில் பணியாற்றினார்.

பின்னர் ஆளும் மக்கள் செயல் கட்சியில் (PAP) சேர்ந்து, 2001 இல் அரசியல்வாதியாக அறிமுகமான அவர், 2003 இல் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார், 2008 வரை இந்தப் பொறுப்பில் பணியாற்றினார்.

தர்மன் பல்வேறு உயர்மட்ட சர்வதேச கவுன்சில்கள் மற்றும் பேனல்களுக்கு தலைமை தாங்கினார்.

பொது மற்றும் தனியார் துறைகள் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த பொருளாதார மற்றும் நிதித் தலைவர்களின் உலகளாவிய கவுன்சிலான முப்பது குழுவின் அறங்காவலர் குழுவின் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

தர்மன் உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) அறங்காவலர் குழுவில் உறுப்பினராகவும், 2024 ஆம் ஆண்டு ஐ.நா உச்சிமாநாட்டில் பயனுள்ள பரிந்துரைகளை வழங்கும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரின் உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

2011 முதல் 2014 வரை, அவர் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கொள்கை ஆலோசனைக் குழுவான சர்வதேச நாணய மற்றும் நிதிக் குழுவின் (IMFC) தலைவராக இருந்து, முதல் ஆசியத் தலைவராக ஆனார்.

2019 முதல் 2022 வரை, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) மனித மேம்பாட்டு அறிக்கையின் (HDR) ஆலோசனைக் குழுவின் இணைத் தலைவராக இருந்தார்.

தனது இளமைப் பருவத்தில் தர்மன் ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு வீரர். கல்வியின் ஒரு வடிவமாக விளையாட்டைப் பற்றி அவர் பேசினார்.

குழந்தைகள் அணியாக இருப்பதன் மதிப்பைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பயிற்சி செய்வதன் மூலம் ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்கிறார்கள், நிபுணத்துவத்தை வளர்க்க இது சிறந்த வழி. மேலும், போட்டியில் விழுந்து அல்லது தோல்வியடைந்து தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளும் திறனை பெறுகிறார்கள் என்று அவர் கூறினார்.

அவர் 2002 முதல் சைனீஸ் கலிகிராஃபியும் ஆர்வத்துடன் கற்று வருகிறார்.

தர்மன் அரசு சாரா நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார் மற்றும் சிங்கப்பூரில் உள்ள இந்திய சமூகத்தின் கல்வி செயல்திறன் மற்றும் அபிலாஷைகளை உயர்த்த முயற்சிக்கும் சிங்கப்பூர் இந்திய மேம்பாட்டு சங்கத்தின் (SINDA) அறங்காவலர் குழுவின் தலைவராகவும் உள்ளார்.

COVID-19 தொற்றுநோயைத் தொடர்ந்து சிங்கப்பூரர்களுக்கான திறன்கள் மற்றும் வேலைகளை மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்ட ஒங் டெங் சியோங் லேபர் லீடர்ஷிப் இன்ஸ்டிடியூட் மற்றும் தேசிய வேலைவாய்ப்பு கவுன்சிலுக்கும் அவர் தலைமை தாங்கினார். சர்வதேச மேடைகளில் பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சிங்கப்பூர் அரசியல்வாதியான எஸ்ஆர் நாதன் என்று அழைக்கப்படும் செல்லப்பன் ராமநாதன் 2009 ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரின் ஜனாதிபதியாகப் பணியாற்றினார். அதேசமயம் தேவன் நாயர் என்று அழைக்கப்படும் மலையாளி வம்சாவளியைச் சேர்ந்த செங்கரா வீட்டில் தேவன் நாயர் 1981 முதல் 85 வரை சிங்கப்பூரின் மூன்றாவது ஜனாதிபதியாகப் பணியாற்றினார். ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com
தீம்புனல் THEEMPUNAL

# பதில் சொல்வாரா? ஜனாதிபதி ரணில்

இலங்கையின் குற்றவாளிகளைப் பொறுப்புக்கூற செய்வதற்கு சர்வதேச மயமாக்கப்பட்ட பொறிமுறைகளை சர்வதேச சமூகம் பயன்படுத்த வேண்டும் என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்துக்கான மக்கள் அமைப்பான பேர்ள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 54 ஆவது அமர்வின் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை குறித்த கலந்துரையாடல்களின் போதே பேர்ள் அமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றை நினைவு கூர்ந்துள்ளது.

நீதிக்கான முயற்சிகள் இலங்கை அரசினதும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளினதும் விருப்பத்திலேயே தங்கியுள்ளது என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கையின் தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் தங்கள் நடவடிக்கைகள் குறித்தும், பாதுகாப்புப் படையினர் குறித்தும் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க மறுத்துள்ளனர், தவறியுள்ளனர் எனவும் பேர்ள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் ஆழமாக வேரூன்றிய சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதம் இலங்கையின் அரசியல் நிலப்பரப்பின் பின்னணியில் முக்கிய உந்துசக்தியாகச் செயற்படுகின்றது, இலங்கையில் உறுதியற்ற தன்மையையும் தண்டனையின்மையையும் தொடர்ந்தும் உருவாக்கி வருகின்றது, தமிழர்களைத் தொடர்ந்தும் ஒடுக்கி வருகின்றது எனவும் பேர்ள் தெரிவித்துள்ளது.

இது காணி அபகரிப்பு துரிதமாக இடம்பெறுவதற்கும் வடக்கு - கிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

அத்துடன், சமீபத்தில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை நீதியும் பொறுப்புக்கூறலும் சாத்தியமாகும் வரை கடந்தகாலங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்தும் மன உளைச்சலை கொடுக்கும் என்பதை நினைவூட்டுகின்றது எனவும் பேர்ள் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் சமீபத்திய அறிக்கை அதன் முடிவுகள் பரிந்துரைகளை முற்றாக நிராகரித்துள்ளது. இலங்கையின் குற்றவாளிகளை பொறுப்புக்கூற செய்வதற்கு சர்வதேச மயமாக்கப்பட்ட பொறிமுறைகளைப் பயன்படுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் தொடர்ந்தும் அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நீதியும் பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் இல்லாத பட்சத்தில் சிங்கள பெரும்பான்மையினவாதம் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படாததாகக் காணப்படும் இன மோதலுக்கான அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வு காணப்படாத நிலை நீடிக்கும் ஸ்திரதன்மையற்ற சூழல் காணப்படும் எனவும், மேலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் இலங்கையில் நெருக்கடிகள் தொடரும் எனவும் பேர்ள் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் உரையாற்ற உள்ளார், 2023 SDG உச்சிமாநாட்டில் நாடுகளின் தலைவர்கள் உரையாடலில் பங்கேற்க உள்ளார், மேலும் நியூயோர்க்கில் அபிவிருத்திக்கான நிதியுதவி தொடர்பான உயர்மட்ட கூட்டத்தில் முக்கிய உரையையும் நிகழ்த்த உள்ளார்.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ.நா பொதுச் சபையின் 78ஆவது அமர்வில், இலங்கைத் தூதுக்குழுவிற்கு விக்கிரமசிங்க தலைமை தாங்குவார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு (PMD) தெரிவித்துள்ளது. அவரது உரையானது 'நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்துதல்' என்ற தொனிப்பொருளில் சுழலும் அனைவருக்கும் அமைதி, செழிப்பு, முன்னேற்றம் மற்றும் நிலைத்தன்மையை நோக்கிய 2030 நிகழ்ச்சி நிரல் மற்றும் அதன் நிலையான வளர்ச்சி இலக்குகள் மீதான நடவடிக்கையை துரிதப்படுத்துதல்.

2023 செப்ரெம்பர் 18-19 திகதிகளில் நடைபெறவிருக்கும் ஞனுபு உச்சி மாநாட்டின் போது விக்கிரமசிங்க, அரச தலைவர்கள் / அரசாங்கத் தலைவர்கள் உரையாடலிலும் கலந்து கொள்வார்.

அபிவிருத்திக்கான நிதியளித்தல் தொடர்பான உயர்மட்டக் கூட்டத்தில் விக்கிரமசிங்க முக்கிய உரையொன்றை வழங்க உள்ளார், அங்கு கடன் நிலைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் உலகளாவிய நிதி பாதுகாப்பு வலையை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் இன்றியமையாததை முன்னிலைப்படுத்த அவர் எதிர்பார்க்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் உடனான சந்திப்பு மற்றும் உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடல்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

பொறுப்புக்கூறல் உரிய விசாரணை தொடர்பாக ஜனாதிபதி ரணில் எங்காவது பதில் சொல்வாரா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ■

# கோழி இறைச்சி, முட்டை விலை குறையும்

## கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர

முட்டை, கோழி இறைச்சி ஆகியவற்றின் விலைகள் அடுத்த வருடம் முதல் வீழ்ச்சி அடையும் எனவும் மீண்டும் விலை அதிகரிப்பு ஏற்படாது, அடுத்த வருடம் முதல் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் கடந்த வியாழக்கிழமை (14) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர,

"கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் நம்நாடு தன்னிறைவு பெற்றிருந்தாலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் நோய்த் தொற்று நிலைமையும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மற்றும் கால்நடைத் தீவன உற்பத்தி குறைந்ததன் விளைவாகவும் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி குறைந்தது.

சுமார் 3,420,000 புதிய கோழிக் குஞ்சுகள் தற்போது கோழிப் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், பெரும்பாலும, அந்தக் கோழிகள் டிசம்பர் மாதத்திற்குள் முட்டையிடும் பருவத்திற்கு வளர்ந்துவிடும். எனவே, எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குப் பின்னர், இந்த நாட்டில் முட்டை உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என குறித்த தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கோழிப் பண்ணைகளுக்குத் தேவையான தீவன உற்பத்திக்காக சோளத்தை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை இந்தத் தொழில்துறையினருக்கு வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் எமது மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள்.

இடைக் கால, கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் படி, வட மாகாணத்தில் கால்நடை வளத்தை மேம்படுத்தும் பணிகளை வலுவூட்டுவதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக செலவிடப்பட்ட தொகை 37 மில்லியன் ரூபாவாகும்.

சிறிய மற்றும் நடுத்தரக் கோழிப் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு நாள் வயதுடைய நாட்டுக் கோழிக் குஞ்சுகளை வழங்குதல், கிராமப்புறங்களில் முட்டை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் போசாக்கை அதிகரிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 48 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்று காரணமாக, உள்நாட்டுக் கோழி இறைச்சி உற்பத்தி 30% சதவீதத்தினால்




குறைந்துள்ளது.

ஆனால், தற்போது புறோயிலர் கோழிக்குஞ்சுகள் அதிக அளவில் பண்ணைகளுக்கு சேர்க்கப்படுவதால், இந்த ஆண்டு இறுதிக்குள், நம் நாட்டின் கோழி இறைச்சி உற்பத்தி, முந்தைய நிலைக்கு திரும்பலாம் என, குறித்த தொழில் துறையினர் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக இந்த ஆண்டு இறுதிக்குள் கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை மேலும் குறையலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

நாட்டில் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னுரிமைப் பணியாகக் கருதி, அவற்றைத் துரிதப்படுத்த கமத்தொழில் அமைச்சு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதன் கீழ், சிறிய மற்றும் நடுத்தரப் பண்ணைகளின் அபிவிருத்தியை ஊக்குவித்தல், உற்பத்தியை மேம்படுத்தல், இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதியை ஊக்குவித்தல், உயர்தர கன்றுகளை இறக்குமதி செய்தல், புற்தரைகளைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும், கால்நடைத் தீவன உற்பத்தியை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் நோய்த் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் முட்டை உற்பத்தியும் 50% சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

கால்நடைத் தீவன உற்பத்தி குறைவு, கால்நடைத் தீவன இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி இல்லாமை, உள்நாட்டு சோள உற்பத்தி குறைவு போன்றவையே இந்த உள்நாட்டு முட்டை உற்பத்திக் குறைவுக்கு முக்கிய காரணங்களாகும்.

ஆனாலும் தற்போது சோள இறக்குமதிக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் காரணமாக, கோழிப்பண்ணைகளில் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி அதிகரித்து வருகிறது. மேலும், அடுத்த 03 மாதங்களில் முட்டை உற்பத்தியை முன்னர் இருந்த நிலைக்கு உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது" என்றார். மஹிந்த அமரவீர தெரிவித்தார். ■

# போர்க்குற்ற விசாரணை நடந்திருந்தால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்திருக்காது



**2019** ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரி யாராக இருக்கும் என்பது தொடர்பான சந்தேகங்கள், ஊகங்கள், தாக்குதல் நடந்த சில மாதங்களிலேயே எல்லோர் மனதிலும் அவரவர் தன்மைகளுக்கு ஏற்ப எழுந்தன. இப்பின்புலத்தில் சனல் 4 தொலைக்காட்சி முழு விபரங்களையும் ஆதாரத்துடன் வெளியிட்டிருக்கிறது. பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்று பலர் மீது போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் ஏற்கெனவே சுமத்தப்பட்டிருந்தன. ஜெனீவா மனித உரிமைச் சபை அறிக்கைகளிலும் குற்றச்சாட்டு விபரங்கள் உண்டு.

ஆனாலும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அத்தனை குற்றங்களையும் மூடிமறைத்து 2020 ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாயவைக் களமிறக்கி அவரை வெற்றிபெற வைப்பதில் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் முழுமையாக ஈடுபட்டார் என்பது பகிரங்கமான உண்மை.

இதனால் தமிழர்களின் அரசியல் விடுதலை மற்றும் இறுதிப் போரில் நடத்தப்பட்ட இன அழிப்பு மற்றும் போர்க் குற்றம் தொடர்பான எந்த ஒரு அக்கறையும் மல்கம் ரஞ்சித்திடம் இருந்திருக்கவில்லை என்பது அப்போதே பட்டவர்த்தனமாகியது.

2009 மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்டபோது, கோட்டபாய ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாகவே நன்றியும் பாராட்டும் தெரிவித்திருந்த மல்கம் ரஞ்சித், தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை விடவும் ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் நீட்சியிலேயே முழுக் கனத்தையும் செலுத்தியிருந்தார் என்பதும் பகிரங்கம்.

'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பும் அதன் சட்டங்களும் பல்லின சமூகங்களுக்கு ஏற்றதாக இல்லை என்பதைக் கூட மல்கம் ரஞ்சித் ஏற்கத் தயாராக இல்லை.

இப்பின்னணியிலேதான் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாயவுக்கு ஆதரவு வழங்கியதோடு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டோருக்கு நீதி கிடைக்கவேண்டும் எனவும் கோரியிருந்தார். விசாரணைகள் இடம்பெற்றுக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்று மல்கம் ரஞ்சித் அப்போது உறுதியாக நம்பிக்கையும் வெளியிட்டிருந்தார்.

ஆனால், இறுதிப் போரில் நடந்த மனிதப் படுகொலைகள், தமிழ் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் எதிலும் மல்கம் ரஞ்சித் கவனம் செலுத்தியதாக இல்லை. 2012 இல் முதன் முறையாக இலங்கை குறித்த தீர்மானம் ஜெனீவா மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்டபோது, சர்வதேச விசாரணை தேவையில்லை என்று மல்கம் ரஞ்சித் நியாயப்படுத்தியிருந்தார். இலங்கைக்கு உள்ளேயே விசாரணைகளை நடத்த முடியும் என்றும் பரிந்துரை செய்திருந்தார்.

ஆனால், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிய விசாரணைக்குக் கோட்டபாயவை நம்பியிருந்த மல்கம் ரஞ்சித், உரிய நடவடிக்கை எடுக்கத் தாமதமாகியதால் சர்வதேச விசாரணையைக் கோரியிருந்தார். 2022 இல் ஜெனீவா மனித உரிமைச் சபைக்கும் சென்றிருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குச் சர்வதேச விசாரணையைக் கோரிய மல்கம் ரஞ்சித், 2009 இறுதிப் போர் மற்றும் 1958 இல் இருந்து மேற்கொள்ளப்பட்ட தமிழர்கள் மீதான படுகொலைகள் பற்றிய விசாரணைகளுக்கு மாத்திரம் உள்ளக விசாரணை போதுமென்று பரிந்துரை செய்தமைதான் வேடிக்கை.

கோட்டபாய ஜனாதிபதியாக இருந்தபோது பௌத்த சமயத்தை முதன்மை மதமாக ஏற்றுக்கொள்வதாகவும் மல்கம் ரஞ்சித் பகிரங்கமாக உறுதியளித்திருந்தார். இது மல்கம் ரஞ்சித்திடம் இருந்த சிங்களத் தேசிய உணர்வைப் பகிரங்கப்படுத்தியது.

சமயத் தலைவராக அதுவும் சர்வதேச கர்த்தினால் அந்தஸ்துடன் இருந்தாலும் பேராயர் மல்கம் ரஞ்சித்திடம் தனது இனத்துக்குரிய தேசிய சிந்தனை இருக்கலாம். அது தவறல்ல. ஆனால், அந்தச் சிங்களத் தேசிய உணர்வு இலங்கைத் தீவில் இருக்கின்ற தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் விடுதலையை நிராகரிக்கும் தன்மை கொண்டதாக இருக்க முடியாது.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிய உண்மை விபரங்களை சனல் 4 தொலைக்காட்சி வெளிப்படுத்திய பின்னர் உடனடியாக மீண்டும் சர்வதேச விசாரணையைக் கோரியிருந்த மல்கம் ரஞ்சித், 2009 இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டும் பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து காணாமல் ஆக்கப்பட்டுமுள்ளமை பற்றியும் எந்தக் கருத்தையும் கூறவில்லை.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 269 பேருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், முப்பது வருடப் போரிலும் அதற்கு முன்னர் 1958 இல் இருந்து தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கொலைகள், வன்முறைகள் பற்றிப் பேசுவதைவிடவும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிக் குரல் கொடுப்போரின் பின்னணி பற்றியே அதிகளவு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்காகச் சிங்கள ஆட்சியாளர்கள், சிங்கள இராணுவ உயர் அதிகாரிகள் சிலரினால் கையாளப்பட்ட தமிழ் - முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் 2009 முள்ளிவாய்க்கால் போரின் போது தமிழர் தாயகப் பிரதேசங்களில் தேசியத்தை மலினப்படுத்தும் அசிங்கமான அரசியலில் (Ugly Treacherous Politics) ஈடுபடுத்தப்பட்டிருந்தன என்பதை சனல் 4 வெளியிடவில்லை.

இந்த அசிங்க அரசியலின் தொடர்ச்சிதான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல். அங்கிருந்துதான் சனல் 4 தனது ஆவணப்படத்தைத் தயாரித்திருக்க வேண்டும். குறிப்பாக, ஜே.ஆர்.ஜயவர்த்தனவில் இருந்து ரணில் விக்கிரமசிங்க வரையும் தமிழர்களின் போராட்டத்தைச் சர்வதேச அரங்கில் பயங்கரவாதமாகத் திசை திருப்பி முறியடிக்க, தமிழ் - முஸ்லிம் ஆயுதக் குழுக்களுக்குச் சம்பளம் வழங்கி இலங்கை இராணுவம் ஈடுபடுத்தியிருந்தது.

இதற்கு அமெரிக்க - இந்திய அரசுகளும் அப்போது ஒத்துழைத்த உண்மைகளை சனல் 4 ஆதாரங்களுடன் வெளியிட விரும்பவில்லை என்பதையே தாக்குதல் பற்றிய ஆவணப்படம் சித்தரிக்கிறது.

ஆவணப் படத்தின் பின்னர், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்த மறுகணமே பேராயர் மல்கம் ரஞ்சித்தும் அவ்வாறு கோரியுள்ளார் என்றால், சிங்கள அரசியல் தலைவர்களும் மல்கம் ரஞ்சித் போன்றோரும் 2009 நடந்த இறுதிப் போரையும் ஈழத் தமிழர்களின் எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்டத்தையும் எப்படிப் பார்க்கின்றனர் என்பது புரிகின்றது.

இலங்கை சிறிய அரசு. ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் நிறைந்த அரசு. அங்கு இன ஒடுக்கல் நடக்கிறது. இவை பற்றியெல்லாம் தெளிவாகத் தெரிந்தாலும் தமது புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கில் தெரியாதது போன்று அமெரிக்க - இந்திய மற்றும் சீன அரசுகள் இயங்குகின்றன.

வல்லரசுகளின் இந்த அணுகுமுறைதான் சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கிடைத்த யோகம். ஆனால், வல்லரசுகளின் இந்தப் பிழையான அணுகுமுறைகள் பற்றி சனல் 4 தொலைக்காட்சி வெளிப்படுத்தவேயில்லை. ஏனெனில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் நிகழ்ச்சி நிரல்தான் இங்கு பிரதானமாகிறது.

இந்த இடத்திலேதான் மல்கம் ரஞ்சித்தின் செயற்பாட்டையும் நோக்க வேண்டியுள்ளது.

தமிழர்களின் அரசியல் நியாயத்தை முடக்க எண்பது வருடங்களாக வெவ்வேறு வியூகங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருக்கும் அநீதிகளை வெளிப்படுத்தக் கூடிய 'மூலங்கள்' வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ்க் கத்தோலிக்க ஆயர்கள், அருட் தந்தையர்கள் பலருக்கும் நன்கு தெரியும். அவர்கள் சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்தியுமுள்ளனர். சனல் 4 தொலைக்காட்சிக்கும் இந்த உண்மை புரியும். முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் முள்ளிவாய்க்காலில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதாக ஜெனீவா மனித உரிமைச் சபையில் வாக்குமூலம் வழங்கியபோது பேராயர் மல்கம் ரஞ்சித்தின் மனச்சாட்சி இழுத்து மூடப்பட்டிருந்தது.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை மற்றும் இன அழிப்பு விசாரணைக் கோரிக்கை அல்லது ஜெனீவா மனித உரிமைச் சபையின் தீர்மானத்துக்கு அமைவாகப் போர்க்குற்ற விசாரணை நடத்துவது பற்றிய விவகாரங்கள் சூடுபிடித்தபோது மல்கம் ரஞ்சித் வாய் திறக்கவில்லை.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

# பொருளாதார மீட்சிக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்



எம்.ஏ.எம்.நிலாம்

இன்று ஆட்சியிலிருக்கும் அரசாங்கமும் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரக்கூடிய அரசாங்கமும் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டிய பிரதான காரணியாக சர்வதேசம் புரிந்துகொள்ளக் கூடியதான வேலைத் திட்டங்களை முன்னிலைப்படுத்திய நிகழ்ச்சி நிரலை தயாரித்துக் கொள்வதேயாகும். நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கான வழிவகையை கையாள வேண்டும். இதன் பொருட்டு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது மிக முக்கியமானதாகும். நால்லாட்சியின் நிகழ்ச்சி நிரல் நம்பிக்கையூட்டுவதாகவும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல், மக்களின் எதிர்ப்பலைகளை பொறுமையுடன் கையாளுதல் போன்றவற்றை மிக அவதானமாக செயன்முறைப் படுத்திக்கொள்ளவேண்டும். மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் காலம் இது. கடந்த காலங்களில் மனித உரிமைகள் பேரவையுடன் செய்து கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை சாதகத் தன்மையுடன் கையாள வேண்டிய அவசியத்தை உணர்ந்து ஆரோக்கியமான தீர்மானங்களின் பக்கம் கவனத்தைச் செலுத்த வேண்டிய அவசியம் எம்முன்னே காணப்படுகிறது. அண்மித்த காலம்வரை மனித உரிமைகள் பேரவை இலங்கை குறித்த விவகாரங்களில் நம்பிக்கை இழக்கும் வகையிலேயே கருத்துக்கள் வெளிப்பட்டன. அதிலிருந்து மீட்சியடைவதற்கான ஆரோக்கியமான செயற்பாடுகள் எதனையும் காண முடியவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளை மீறும் வகையிலேயே இலங்கை செயற்படுவதாக பேரவை விமர்சனத்தை வெளியிட்டு வருகின்றது.

இலங்கை தொடர்ந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அதன் எதிர்ப்பு அரசியலையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இது பேரவையை கவலை கொள்ளச் செய்யும் விதமாக அமைவதால் நாடு எதிர்காலத்தில் சர்வதேசத்திடமிருந்து ஒதுக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதை உணர்த்தி நிற்கின்றது. பொருளாதார நெருக்கடியால் துவண்டு கொண்டிருக்கும் நிலையில் சர்வதேசத்திடமிருந்து ஓரங்கட்டப்படும் நிலை ஏற்படுமானால் அதன் பின் விளைவுகள் பாரதூரமானதாக அமையலாம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாடு சர்வதேசத்தின் பிடியில் இறுக்கமாகிப் போனால் உள்நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் பலத்த சவால்களை எதிர்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போகலாம்.

இவ்வாறானதொரு நிலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது குழுவிடம் கியூபா மற்றும் அமெரிக்காவுக்குமான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். கியூபாத் தலைநகரில் நடைபெறும் ஜி 77 மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவதுடன் ஜி 77 மாநாட்டுத் தலைவர்களுடன் விரிவான சந்திப்புகளையும் மேற்கொள்ளவிருக்கின்றார். இலங்கை மட்டுமல்ல முழு உலகும் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு எவ்வாறு தீர்வுகாண முடியும் என்பன தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்திருக்கும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகப் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கு இந்த மாநாட்டின் உறுப்பு நாடுகள் எவ்வாறு ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதனை இங்கு அவர் தெளிவுபடுத்தவிருக்கின்றார்.

கடந்த வாரம் புதுடில்லியில் இடம்பெற்ற ஜி 20 மாநாட்டில்கூட ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டு உற்பத்திக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் மாநாட்டுத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். இந்த ஆண்டின் ஜி 20 மாநாட்டின் தலைமைப் பொறுப்பு இந்தியாவுக்குக் கிடைத்திருக்கின்றது. இந்தியா தலைமைப் பொறுப்பை ஏற்று ஓராண்டு காலத்தில் சாதிக்க வேண்டிய முக்கிய பொறுப்புக்கள் அதன் வசமிருக்கின்றது. 1990 களில் ஆசியப் பிராந்தியத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய நிதி நெருக்கடியைத் தொடர்ந்து சர்வதேசப் பொருளாதார ஒத்துழைப்பிற்கான ஒரு அமைப்பை உருவாக்கும் நோக்கிலேயே அதே ஆண்டில் ஜி 20 மாநாடு ஸ்தாபிக்கப்பட்டது. அந்தந்த நாடுகளில் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்கள் கூடி நிலைமைகளை ஆராய்ந்து தீர்மானங்களை எடுத்தனர்.

உண்மையிலேயே ஜி 20 மாநாடு ஆரோக்கியம் நிறைந்ததாகவே நடந்து முடிந்துள்ளது. உறுப்புரிமை கொண்ட எந்தவொரு நாட்டையும் புறந்தள்ளி வைக்காமல் அனைத்து நாடுகளையும் உள்வாங்கி சகல நாடுகளுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் தீர்மானங்கள் காட்டப்பட்டுள்ளன. புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஆபிரிக்க ஒன்றியத்தைக்கூட மாநாடு கைவிட்டுவிடவில்லை. ஆபிரிக்க ஒன்றியத்தை இணைத்துக் கொண்டமை இந்தியாவின் பெரும் சாதனை என்றே கூறவேண்டும். இந்தியா இந்த மாநாட்டை வெற்றிகரமாகவும் ஆக்கபூர்வமாகவும் நடத்தி முடித்துள்ளதாக உலகத் தலைவர்கள் பாராட்டியுள்ளனர். இந்த மாநாட்டின் ஊடாக ஒவ்வொரு நாடும் புத்துணர்ச்சி பெற்றுக் கொண்டிருப்பதாகவே அவதானிக்க முடிகிறது. இந்த மாநாட்டின் இயங்கு நிலையின் மூலமாக உலக அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என நம்பக்கூடியதாக உள்ளது.

அடுத்தபடியாக ஹவானாவில் நடைபெறும் ஜி 77 மாநாட்டின் மூலமும் ஆரோக்கியமான முடிவுகள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாம் முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது போல ஜி 77 மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்கள் கடந்த காலத்தை மதிப்பீடு செய்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் 134 நாடுகளும் ஒத்த நிலைப்பாட்டில் செயற்படுவதன் மூலம் பொருளாதார நெருக்கடியை நிவர்த்திப்பதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொள்வதில் முனைப்புக் காட்டிவருகின்றன. ஹவானா மாநாடு அல்லது ஜி 77 மாநாடு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆக்கபூர்வமான வேலைத்திட்டத்தை எதிர்பார்த்த வண்ணமுள்ளன. ஜி 77 மாநாடு ரணில் மீது அபரிமிதமான நம்பிக்கை கொண்டுள்ளது.

உலகைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக உலக நாடுகள் அதிதீவிரம் காட்டிவருகின்றன. அந்த நாடுகளின் வேலைத் திட்டங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளும் சந்திப்புகளும் பலம் வாய்ந்தவையாக அமையும் என்று பற்றுறுதியான நம்பிக்கை ஜி 77 மாநாடு காணப்படுவதை அந்த நாடுகளின் தலைவர்களின் அறிவிப்புக்கள் வெளிக்காட்டி நிற்கின்றன. இந்த நெருக்கடியான சவாலை வெற்றி கொள்வதற்கு முதலில் தேவைப்படுவது ஒற்றுமை ஏற்படுவதாகும். அனைத்து நாடுகளும் ஒற்றுமைப்பட்டு ஓரணியில் இயங்கினால் மட்டுமே இந்தச் சவாலை வெற்றி கொள்ளலாம் என்பதை இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஜி 77 மாநாடு முடிந்த கையோடு ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க் புறப்படுகிறார். அங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை ஐ.நாவின் 78 ஆவது பொதுச் சபை அமர்வு இடம்பெறவுள்ளது. இம்முறை ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தின் கருப்பொருள் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல் என்பதாகும். இந்தக் கருப்பொருள் உலகில் சகல நாடுகளுக்கும் பொருந்தக் கூடியதொன்றாகவே பார்க்கப்படுகிறது. இதனிடையே அபிவிருத்திக்கான நிதிச் செயற்பாடுகள் குறித்தும் மாநாட்டில் மேலதிகமாக ஆராயப்படவுள்ளது. இந்த இரு தொனிப் பொருளையும் முன்னிறுத்தியே ஜனாதிபதியின் உரையும் அமையப் போகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை தொடங்கப்பட்ட பொருளாதார மீட்சித் திட்டங்கள் மீது ஆர்வம் காட்டிய உலக நாடுகள் அவரது அரசியல் வியூகம், பொருளாதார அபிவிருத்தி வியூகம் போன்றவை குறித்து அதீத நம்பிக்கை கொண்டிருப்பதன் காரணமாகவே ஐ.நா பொதுச்சபை கூட்ட நிகழ்ச்சி நிரலில் அவருக்கான முன்னுரிமையும் கூடுதல் நேரகாலமும் ஒதுக்கப்பட்டிருப்பதாக நிகழ்ச்சித்திட்ட தயாரிப்புக்குழு தெரிவித்திருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு எமது நாட்டின் பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டத்தை முன்னகர்த்திச் செல்லும் நோக்குடனேயே அவர் இம்முறை இந்த இரண்டு மாநாடுகளிலும் பங்கேற்பதற்கான முடிவை எடுத்து பயணித்துள்ளார். இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதியின் முயற்சிகள் தொடர்பில் கறுப்புக்கண்ணாடி அணிந்து பார்க்காமலும் நாட்டை தவறாக வழிநடத்தாமலும் செயற்பட வேண்டிய பாரிய கடப்பாடு அரசியல் தலைவர்களையும் புத்திஜீவிகளையும் சார்ந்திருப்பதை மனதில் கொள்ளுமாறு வேண்டப்படுகிறது. ■

# எறிகிறவன் கையில் பொல்லைக் கொடுக்க வேண்டும்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**



"இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வாக அமையாது. சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அரசியல் தீர்வையே தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும்" என்று தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா மட்டக்களப்பில் 21.08.2023 அன்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான முழுமையான தீர்வு என்று தமிழ் அரசியல் பொதுவெளியில் செயற்படுகின்ற எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறியது கிடையாது. 13 ஆவது திருத்தத்தை அனுசரித்து அதனை அமுல்படுத்துவதற்கு முழு அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எஃபின் செயலாளர் நாயகம் பத்மநாபாகூட அப்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை.

இப்போது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யும் எத்தனங்களில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும்கூட 13 ஆவது திருத்தமே இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு என்று கூறவில்லை.

அப்படியிருக்க, இதுவரை தமிழர் தரப்பிலிருந்து எவருமே கூறாத கூற்றைத் தமிழரசுக் கட்சியினர் செல்லுமிடமெல்லாம் உச்சரித்துக் கொண்டிருப்பதால் என்ன ஆகப் போகிறது? அதனால் மட்டும் 'சமஷ்டி' வானத்திலிருந்து தமிழர்களின் மடியில் வந்து விழுந்து விடுமா?

1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த பின்னர் அதன் ஸ்தாபக தலைவரான எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) 'சமஷ்டி' யையே இனப் பிரச்சினைக்கான திருப்தியான தீர்வாக அரசியல் அரங்கிலே முன்வைத்த போதிலும், 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும் 1965 இல் டட்லி - செல்வா ஒப்பந்தத்தையும் கைச்சாத்திட்டார். இவ் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பது வேறு விடயம். ஆனால், இவ் ஒப்பந்தங்களைத் தன்னால் முன்வைக்கப்பட்ட அரசியல் இலக்கினை அடைவதற்கான படிமுறைகளாக - அணுகுமுறைகளாகக் கருதியே செயற்பட்டார். அப்படிச் செயற்பட்ட அவர்கூடச் சென்ற இடமெல்லாம் 'பண்டா செல்வா ஒப்பந்தம்' தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வாக அமையாது என்றோ, 'டட்லி - செல்வா' ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வாக அமையாது என்றோ சொல்லிக் கொண்டு திரிந்ததில்லை.

13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்பட்டால் இலங்கை இரண்டாகப் பிளவுபட்டுவிடும் எனத் தென்னிலங்கையில் உள்ள இனவாத சக்திகள் குரல் எழுப்பிக் குழப்பிக் கொண்டிருக்கும் ஒரு களநிலையில் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பது போன்று மாவை சேனாதிராசா இவ்வாறு, "இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வாக அமையாது. சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அரசியல் தீர்வையே தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும்" எனச் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிப்பதன் மூலம் மாவை சேனாதிராசா எதனைச் சாதிக்கப் போகிறார். இது எதிர்மறையான பிரதிபலிப்பையே ஏற்படுத்தும். உண்மையிலேயே சமஷ்டிக் கட்டமைப்பு என்பதை எவ்வாறு நீங்கள் அடையப்போகிறீர்கள்? என்று மாவை அவர்களிடம் காதோடு காதாகக் கேட்டுப் பார்ப்பவர்களுக்கு அதற்கான அவரின் விளக்கம் பூச்சியமாகவே இருக்கும். இதுதான் இலங்கைத் தமிழர்களின் தலைவிதியும் சாபக்கேடுமாகும்.

இவை ஒரு புறமிருக்கட்டும். 1949 இலிருந்து இன்றுவரை (2023) கடந்த 74 வருடங்களாகச் சமஷ்டி பற்றியே கூறிவரும் தமிழரசுக் கட்சியிடம் அதனை அடைவதற்கான வழி வரைபடமோ, வேலைத்திட்டமோ இருந்ததுண்டா? அல்லது இப்போதாவது இருக்கிறதா? என்றால் அது இல்லவே இல்லை.

தந்தை செல்வா 1949 இலிருந்து புதிய குடியரசு அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்ட 1972 வரை சமஷ்டிக்காகச் சுமார் 23 வருடங்கள் அரசியல் ரீதியாகப் (அஹிம்சாவழியில்) போராடிவிட்டு முடியாமல் போனதாலேயே தனது அரசியல் தோல்வியை நேர்மையாக ஒப்புக்கொள்ளும் வகையில் 'தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறிவிட்டுப் பின்னர் கண்ணை மூடினார்.

1976 இலிருந்து 'தமிழீழத்' தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டம் தமிழ் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட வரலாறு அனைவருக்கும் தெரியும். அதன் விளைவாகத்தானும் சமஷ்டி சாத்தியப்படவில்லை.

இப்போது 2009 இல் ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வந்த பின்னர் தமிழரசுக் கட்சி தமிழர்களுக்குச் சஷ்டியை எப்போது? எவ்வாறு பெற்றுத்தரப் போகிறது? மாவை சேனாதிராசாவின் கூற்று சுத்த ஏமாற்று அரசியலாகும். அதாவது, தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது என்னவென்று தெளிவில்லாமல் பேசும் அரசியலற்ற அரசியல் ஆகும்.

மேலும், மட்டக்களப்பில் 21.08.2023 அன்று நடந்த மேற்படி செய்தியாளர் சந்திப்பின் போது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வதில் தமக்கு (தமிழரசுக் கட்சிக்கு) ஆட்சேபனை இல்லை என்றும் மாவை அறிவித்திருந்தார். ஏதோ தமிழரசுக் கட்சி ஆட்சேபித்தால் 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்செய்யப்படமாட்டாது ஆட்சேபிக்காவிட்டால் அது முழுமையாக அமுல் செய்யப்பட்டுவிடும் என்பது போல தனது அரசியல் சிறுபிள்ளைத்தனத்தையும் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

'சமஷ்டி' விடயம் ஒரு புறமிருக்க, 13 ஆவது திருத்தத்தைத்தானும் முழுமையாக அமுல் செய்வதற்கு அது நிறைவேற்றப்பட்ட 1987 இலிருந்து இன்று வரை (2023) கடந்த 36 ஆண்டுகளாகத் தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழரசுக் கட்சியைப் பிரதான கட்சியாகக் கொண்டு விளங்கிய முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது தமிழரசுக் கட்சியையே மீண்டும் பிரதான கட்சியாகக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ ஆற்றிய அரசியல் ரீதியான பங்களிப்பு என்ன? எதுவுமே இல்லை.

1987 இல் நடந்த வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைந்த முதலாவது மாகாண சபைத் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்தல் (அச்சுறுத்தல்) விடுத்தபோது அதனை நிராகரித்து முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கம் தேர்தலில் பங்குபற்றி வாக்களிக்கும்படி தமிழ் மக்களை ஊடக அறிக்கை மூலம் கேட்டுக் கொண்ட ஒரு துணிகரமான நற்காரியத்தை முன்னெடுத்தார். அமிர்தலிங்கம் மறைந்து இன்றுவரை கடந்துவிட்ட 34 ஆண்டுகளில் தமிழரசுக் கட்சியோ தமிழர் விடுதலைக் கூட்டணியோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வதற்கு ஆற்றிய அரசியல் ரீதியான பங்களிப்பு என்ன? விடை பூச்சியமே.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வதற்குத் தமிழரசுக் கட்சியோ தமிழர் விடுதலைக் கூட்டணியோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ ஒரு சிறு துரும்பைத்தானும் தூக்கிப் போட்டதில்லை. மாறாக, அதனைச் சீர்குலைக்கச் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தென்னிலங்கைச் சிங்களப் பௌத்த பேரினவாத அரசாங்கங்களுக்கும் சக்திகளுக்குமே துணைபோயின.

இந்த உண்மைகள் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு மூடி மறைக்கப்பட்டதனால் தான் முறையாக வெளிப்படுத்தப்படாதபடியினால் தான் வடக்கு கிழக்கில் உள்ள பெரும்பான்மைத் தமிழ் மக்கள் முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் (தமிழரசுக் கட்சிக்கும்) தேர்தல்களில் வாக்களித்து வந்தார்கள்.

13 ஆவது திருத்தத்தையே முழுமையாகவும் முறையாகவும் அமுல் செய்வதில் தனது அரசியல் கையாலாகாத்தனத்தைக் காட்டியுள்ள தமிழரசுக் கட்சி இப்போதும் 'சமஷ்டி' யை முன்னெடுப்பதாகக் கூறுவது 'கூரையேறிக் கோழி பிடிக்கத் தெரியாதவன் வானமேறி வைகுந்தம் போன' கதையாகத்தான் உள்ளது. இன்னமும் தமிழ் மக்களை ஏமாற்றமுடியும் என்று நினைத்துக்கொண்டா இப்படியான ஏமாற்றுக் கதைகளைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவரான மாவை சேனாதிராசா அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

உண்மையில், அதிகாரப் பகிர்வுக்கான இயக்கத்தால் இப்போது முடக்கி விடப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யும் செயற்பாட்டினையாவது முழுமனத்தோடு ஆதரிக்காமல் அதற்கு முட்டுக்கட்டை போடுகின்ற தமிழரசுக் கட்சி உட்பட தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் எந்தவிதமான கருணையும் காட்டாது வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்கள் எதிர்காலத்தில் நிராகரிப்பது மட்டுமே தமிழர்களுடைய அரசியல் பொதுவெளியில் நேர்மறையான நிகழ்வுகள் இடம்பெறுவதற்குச் சாதகமான இடைவெளியை ஏற்படுத்தும்.

காலிலே போட்ட செருப்பு காதறுந்து போய்விட்டால் அதனை எறிந்து விடுவதைப்போல அல்லது எறிய மனம் வராவிட்டால் கூரையில் செருகி வைப்பது போல அரசியல் கையாலாகாத்தனமுடைய காலாவதியாகிவிட்ட இவ்வாறான 'போலி'த் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை ஒதுக்கிவிட்டு அல்லது ஓரம் கட்டிவிட்டு இனிமேல் எறிகிறவன் கையில் பொல்லைக் கொடுப்பதற்குத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் 'மாற்றம்' நிகழும். ■

# ஆனையை வென்ற அரியாத்தை

செல்வகுமாரசாமி அபிசேகன்
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைகழகம்
இரண்டாம் வருடம்



நாட்டார் வழக்காறுகள் என்பது ஒவ்வொரு மனிதனதும் ஒவ்வொரு மக்கள் குழுவினரதும் அடையாளச் சின்னமாக காலங்காலமாக இருந்து வருகின்றது. நாட்டார் கதைகள், பாடல்கள், நாடகங்கள், கூத்துக்கள் என்பன எமது இருப்பை உறுதி செய்யும் பிரதான காரணிகளாகும். ஆகவே, எம் மக்களின் வரலாற்றை நினைவு கூறும் மரபுகளை பேணிக் காப்பது எமது தலையாய கடமையாகும். அந்த வகையில் வீரம் செறிந்த வன்னி மண்ணின் வரலாறுகள் தற்போதைய காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கடிக்கப்பட்டு வருகின்றது. எத்தனையோ இழப்புக்களையும் துன்பங்களையும் வீர வரலாறுகளையும் சுமந்து கொண்டு திரியும் மண்ணின் வரலாறு பற்றி அறிந்து வைத்திருத்தல் மிக முக்கியமானதொன்றாகும். வன்னி மண்ணின் வரலாறு எனும் போது சரித்திரம் படைத்த பண்டார வன்னியனின் வீர வரலாற்றில் இருந்துதான் தொடங்குகின்றது. வன்னி மண்ணில் வீரம் செரிந்தவர்கள் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும்தான் என்பது சொல்லி தெரிய வேண்டியதில்லை. இந்த மண்ணுக்குச் சொந்தமான பெண்கள் உலகத்தின் ஏனைய சரித்திர நாயகிகளுக்கு எந்த வகையில் சளைத்தவர்கள் அல்ல என்பதை "ஆனையை வென்ற அறியாத்தை" என்ற வீரப் பெண்மணி உலகிற்கு பறை சாற்றி இருக்கின்றாள்.

ஈழத்தமிழரின் முதல் வீராங்கனை என வர்ணிக்கப்படும் ஆனையை அடக்கிய அரியாத்தையின் வரலாறு "வேலப் பனிக்கர் ஒப்பாரி" எனும் நாட்டார் வழக்கினை ஆதாரமாகக் கொண்டு வெளிவந்துள்ளது. இந்த வரலாறானது வன்னிப் பகுதியில் "அரியான் பொய்கை", "வேழம்படுத்த வீராங்கனை" எனும் பெயர்களில் பிரபல்யம் மிக்க நாட்டுக் கூத்துக்களாக திகழ்ந்துள்ளன. எனினும் தற்போதைய காலங்களில் இவை மேடையேற்றப்படுவதில்லை. கதை சொல்லல் முறையிலான பாங்கில் இவ் வரலாறு மக்களிடம் காவிச் செல்லப்படுகின்றது. இந்தவகையில் பல வீரதீர கலாசார விழுமியங்கள் மிகுந்த எண்ணற்ற வரலாறுகளை உள்ளடக்கிய வன்னி மண்ணில் பெண்கள் தமது கற்பையே காவல் தெய்வமாக போற்றி வந்திருக்கின்றார்கள் என்பதை அரியாத்தையின் வரலாறு தெளிவு படுத்துகின்றது.

"வேலப்பணிக்கர் ஒப்பாரி" எனும் நாட்டார் இலக்கியத்தின் தலைவிதான் அரியாத்தை எவருமே அடக்க முடியாத யானையை அடக்கிப் பிடித்துக் கொண்டு வந்த வீரப்பெண் அவள். அத்தகைய பெண்ணினுடைய வரலாறு இன்று பெரும்பாலான வன்னி மக்களுக்கே தெரியவில்லை என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமுழமுனை என்ற இடத்தை இராசதானியாகக் கொண்ட பண்டாரவன்னியனின் மூதாதையார்களில் ஒருவரான சின்னவன்னியன் அரசாட்சி புரிந்த காலத்தில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் கதை இது. நாட்டுமக்கள் எந்தக் குறையும் இன்றி சந்தோசமாக வாழ்க்கை நடத்தி வந்தனர். திடீரென ஆண்டான் குளத்தை அடுத்துள்ள கண்டல் காட்டில் எதிர்பாராத விதமாக ஒரு யானை புகுந்தது. அது பதினாறு அடி உயரத்தில் ஒரு மலையை போன்று காட்சி தந்தது. அதன் உருவமானது பார்ப்பவர்களையே வியக்க வைக்கும் அளவுக்கு பெரிதாக விளங்கியது. அந்த யானை மதங் கொண்டு அக்கிராம மக்களை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது. அந்த யானையின் வெறித்தனத்தால் வயல்கள் எல்லாம் நாசமாகின. தென்னை, பலா போன்ற கனி மரங்கள் சின்னாபின்னமாகின. குவித்த நெற்போரை எல்லாம் யானை தின்று கொட்டில்கள் குடிசைகளை எல்லாம் பிடுங்கி எறிந்தது. அதனிடம் அகப்பட்டு இறந்த குடிமக்களின் எண்ணிக்கையோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது.

யானையின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மன்னன் சின்னவன்னியனிடம் முறையிட்டனர். மன்னன் மக்களுக்கு ஆறுதல் கூறியதோடு மட்டுமல்லாமல் அந்த யானையை பிடிப்பதாகவும் உறுதியளித்தான். உடனே அவன் ஏழு ஊர்ப் பணிக்கர்களுக்கும் ஓலை எழுதி வரவழைத்தான். ஆனால், பணிக்கர்காரர்களாகிய ஆனை மறிகாரர்கள் யாவரும் ஆலோசித்து அந்த யானையை ஏழுமுழ யானை, கோபமுள்ள யானை, மழை முகில் போல் பிளிறிக்கொண்டு நிற்கின்றது. அந்த யானையை அடக்குவதற்காக சென்று பலர் இறந்து போய் விட்டார்கள். அந்த யானையை மட்டும் எங்களால் பிடிக்க முடியாது. எம்மை மன்னிக்க வேண்டும் என்று கூறி சென்று விட்டார்கள்.

சின்னவன்னியனும் மக்களுக்கு யானையை பிடிப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். கட்டாயம் பிடித்தாக வேண்டும். உங்களில் யார் வீரன் என்று சொல்லுங்கள். அவன் மட்டும் சென்று யானையைப் பிடிக்கட்டும் என்றான் சின்னவன்னியன். அந்த யானையை பிடிக்கும் வல்லமை உடையவன் இந்த வேலப்பணிக்கன்தான். எங்கள் எவராலும் முடியாது என்று ஒரு பாகன் சொல்லி முடிக்கும் முன் அங்கிருந்த நீலப்பணிக்கன் எனும் அரியாத்தையின் மைத்துனன் என்பவன் வேலப்பணிக்கனா? இவனா இந்த யானையைப் பிடிக்கப் போகின்றான். இவன் ஒரு கோழை. இவன் மனைவி அரியாத்தைதான் அந்த யானையைப் பிடிப்பாள் என்று இடைமறித்தான்.

நீலப்பணிக்கன் என்பவன் அரியாத்தையை திருமணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இருந்தவன். ஆனால், அரியாத்தையின் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. அதனால் வெட்கமடைந்தவன் எந்த வழியிலாவது வேலப்பணிக்கனைப் பழி வாங்க வேண்டும் எனக் காத்திருந்தான். இப்போது எல்லோரது முன்னிலையிலும் அவனை அவமானப் படுத்தினான். இதைக்கேட்ட வேலப்பணிக்கர் விரைவாக வீட்டுக்கு வந்து கவலையோடு இருந்தான். அரியாத்தை காரணங்கேட்க அரச சபையில் நடந்ததைக் கூறினார்.

அரியாத்தை எனக்கு வந்த அவமானத்தை நீக்க நான் சென்று அந்த மதயானையை அடக்கி கட்டி வருவதாகக் கூறி புறப்பட்ட அனுமதி தரும்படி வேண்டினாள். வேலப்பணிக்கரும் வேறு வழி தெரியாமல் சகுனங்கள் சரியில்லை என்றும் மறுநாள் காலையில் செல்லும்படியும் கூறினார். அவளும் அதற்குச் சம்மதித்து மறுநாள் காலையில் எழுந்து வீரபத்திரரை தஞ்சம் என நினைத்து வேலப்பணிக்கர் கொடுத்து வழியனுப்பிய மான்வார்க் கயிற்றையும் கைதடியையும் எடுத்துக்கொண்டு அந்த யானை நிற்பதாகக் கூறப்பட்ட இடத்திற்கு கயிற்றுடன் சென்றாள்.

வழியில் நாகபாம்பு ஒன்று சீறிப் படமெடுத்து வழிமறித்தது. நடுநடுங்கிய அவள் நாகதம்பிரானை நினைத்து வழிபட்டு "பணிக்கர்மார் எல்லோரும் ஆனைகட்டப் பயந்து விட்டனர். பெண்ணாகிய நான் அந்த ஆனையை நான் ஒரு பத்தினியாக இருந்தால் கட்டப் புறப்பட்டிருக்கிறேன். எனக்கு அருள் செய்யவேண்டும்" என்று சொல்ல நாக பாம்பு புற்றுக்குள் சென்றுவிட்டது. காட்டில் அலைந்து திரிந்து அந்த மத யானையைக் கயிறு போட்டுப் பிடித்த அரியாத்தை அந்த யானை மீதே ஏறி அரண்மனையை நோக்கி வந்தாள். யானை போட்ட பிளிறல் சத்தம் அரண்மணை வரை கேட்கிறது. அரியாத்தையை வரவேற்பதற்காக அரண்மனை விழாக்கோலம் பூண்டது. பட்டத்து அரசியோ அந்த யானையை தனது பட்டத்து யானையாக்கும் ஆவலோடு காத்திருந்தாள். அரியாத்தை மன்னனைத் தலை வணங்கி விட்டு அரண்மனைக்கு அருகிலுள்ள அந்த யானையை ஒரு அத்தி மரத்தில் கட்டி வைத்தாள். அதன்பின் சின்னவன்னியனாரின் அழைப்பின்பேரில் சென்று மரியாதை வரிசைகள் எல்லாம் பெற்றாள். மன்னன் அவளை அழைத்து இன்றிலிருந்து நீ "வேழம்படுத்த வீராங்கனை" என்று அழைக்கப்படுவாய் என்று புகழாரம் சூட்டினான். அரசியோ அவளது வீரத்தைப் பாராட்டி விலை மதிப்பற்ற பொன்னாடை போர்த்தி மகிழ்வித்தாள். ஆனால், நீலப்பணிக்கன் அவனது வஞ்சக மூளை வேறுவிதத்தில் வேலை செய்தது. எங்க ளால் முடியாததை இவள் செய்வதா? இதன் மூலம் வேலனைக் கொல்லலாம் என்றால் இவள் அதைக் கெடுத்து விட்டாளே. இவளுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் என்று எண்ணியவன் அரியாத் தையைக் கொல்லும் சதியோடு தன் மனைவியிடம் சென்றாள். தனது மனைவியிடம் நஞ்சுப்பொடி யைக் கொடுத்து அதை எப்படியாவது வெற்றி யோடு திரும்பி வரும் அரியாத்தை உடையில் பூசும்படி சொன்னான்.

விருந்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய அரியாத்தையை நீலப்பணிக்கனின் மனைவியான நீலகேசரி இடைமறித்து பாராட்டு வழங்குவதுபோல் அரியாத்தையின் ஆடையைத் தொட்டு தனது வேலையை சரியாகச் செய்து முடித்தாள். ஏதும் அறியாத அரியாத்தையோ நீலகேசரியிடம் விடைபெற்று வீடு நோக்கிச் சென்றாள். அரியாத்தையின் தலையோ சுற்றுகிறது. அப்போது அரண்மனையில் இருந்த தன் கணவன் சகுனங்கள் சரியில்லாததால் மன்னனிடம் விடைபெற்று வீடு சென்றான். அங்கே அரியாத்தை துடிதுடித்துக் கொண்டு புலம்பினாள். "அந்த யானையை அவிழ்க்குமாறும் யானை அப்படியே நின்று இறந்து விட்டால் பெரும் பழி வந்துவிடும் என்றும் என்னைப்போல் கற்புடையாள் ஒருத்தியால்தான் அந்த யானையைக் கட்டவிழ்த்துவிட முடியும். ஏழு சுருள் வெற்றிலையும் எடுத்துச் சென்று கும்பிட்டு தெண்டனிட்டு அந்தக் கொம்பன் யானை முன் நின்றால் கட்டை அவிழ்க்க காலைக் கொடுக்கும். கட்டை அவிழ்த்தாலும் அது தண்ணீர் குடியாது" என்று பலவாறாகச் சொல்லிப் புலம்பினாள். வேலப்பணிக்கரின் வலது தொடையிலே சாய்ந்து படுத்துக் கொள்கிறாள். அவளது உயிர் பிரிகிறது. அவளுக்கு என்ன நடந்தது? என்று அறியாமல் வேலப்பணிக்கர் அழுது புலம்பி யார் தன் மனைவியின் இறப்புக்குக் காரணம் என்று அறியாதவராய்த் துடிதுடித்து அவளுடனே உடன்கட்டை ஏறி உயிர்துறக்கிறார். இதுவே வேலப்பணிக்கன் ஒப்பாரி கூறும் அரியாத்தையின் வரலாறு.

(முல்லை மாவட்டம்) குமுழமுனைக் கிராமத்தில் மதயானையைக் வென்ற மாதரசி வேலப்பணிக்கன் அரியாத்தையின் வீரவரலாறு ஒப்பாரியாகப் பாடப்பட்டுள்ளது. பெரிய வெளியிலமைந்துள்ள கண்டல் என்னும் இடத்தில் மதயானையைக் கட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதனால் அந்த இடம் இன்றும் "கொம்பன் படுத்த கண்டல்" என அழைக்கப்படுகிறது என்கின்றனர். அந்த யானையை எவரும் அவிழ்த்து விடாததால் அது அந்த இடத்திலேயே இறந்து விட்டது என்று சொல்கிறார்கள்.

எமது தமிழினம் தமது சொந்த அடையாளங்களையே தொலைத்து விட்டு நிற்கும் நிலையில் எமது பண்பாட்டு பாரம்பரியங்களை நாம் தெரிந்து வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல் எமக்கடுத்து வரக்கூடிய அடுத்த தலைமுறையினருக்கும் கடத்த வேண்டியது மிக முக்கியமான வாழ்நாள் பொறுப்பாகும். அரியத்தை போன்ற வீரப் பெண்மணிகளை வரலாறு தன்னுள்ளே மறைத்து வைத்துக் கொண்டுள்ளது. எனவே, இது போன்ற வரலாறுகளையும் வரலாற்று இடங்களையும் எமது சமூகம் மறந்து போன மனிதர்களையும் நினைவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ■

# சனல் – 4 தமிழ் மக்களுக்கும் வெளிகளைத் திறக்குமா?



சி.அ.யோதிலிங்கம்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடர் நடைபெறுகிறது. அதற்கு முன்னரே மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் போர்க் குற்றம் தொடர்பாக புதிய விடயங்கள் பெரிதாக இல்லை. பழைய விடயங்கள்தான். இலங்கை அரசின் மீது அழுத்தமும் பெரியளவிற்கு பிரயோகிக்கப்பட்டுள்ளது எனக் கூறமுடியாது. அதிருப்திகள் மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதிலும் போர்க்குற்ற விவகாரங்கள் ஒரு பகுதி தான். தென்னிலங்கையின் ஏனைய மனித உரிமை விவகாரங்களான உயிர்த்தஞாயிறு, அதிகார துஷ்பிரயோகம், ஊழல் என்பன பற்றியே அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. போர்க்குற்ற விவகாரத்தை இலங்கை விவகாரத்தின் சிறிய பகுதியாக்குதல் என்பதில் மேற்குலக சக்திகள் கவனமாக இருக்கின்றன என்பதையே இவை வெளிக்காட்டுகின்றன. அதாவது சிறுப்பித்துக் காட்டல் என்ற தந்திரோபாயம் இங்கு பின்பற்றப்படுகின்றது.  இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

யுத்தம் முடிவடைந்து 14 வருடங்களாகியும் உண்மை, நீதிப் பிரகாரம் கிடைக்காததினால் பாதிக்கப்பட்டவர்கள் வேதனைப்படுகின்றனர். எந்தவொரு நிலைமாறு காலநீதிச் செயன்முறையும் வெற்றியடைவதற்கு உண்மையான முயற்சிகளினால் அடித்தளம் அமைக்கப்படல் வேண்டும். அதற்கான அரசியல் விருப்புத்தேவை, அரசியல் போராட்டம் சிறந்த நிர்வாகத்தையும் சகலரையும் உள்ளடக்கிய தொலைநோக்கையும் கோரியிருந்தது. அதாவது, சமூக ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கக் கோரியுள்ளது. என்கின்ற விடயங்களே கூறப்பட்டுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் அறிக்கையைவிட சனல்-4 அறிக்கைதான் இலங்கையின் அரசியல் களத்தை பரபரப்பாக்கியுள்ளது. சுருக்கக் கூறின் ஆணையாளரின் அறிக்கையைவிட சனல்-4 மேல் நிற்கின்றது எனலாம்.  முன்னைய அறிக்கைகளுடன் ஒப்பிடும்போது இது காரம் குறைந்ததுதான்.

முன்னைய அறிக்கை குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துதல், நாடுகள் தங்கள் நீதிமன்றங்களில் விசாரித்தல் போன்ற விடயங்களையும் உள்ளடக்கியிருந்தன. அவை எதுவும் புது அறிக்கையில் இல்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தின் நிகழ்ச்சி நிரலை நகர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றுதான். அந்த வகையில் சர்வதேச அரசியலுக்கு அது கட்டுப்பட்டதுதான். சர்வதேச அரசியல் தூக்கச் சொன்னால் தூக்கும். இறக்கச் சொன்னால் இறக்கும். என்ற நிலையிலேயே ஐ.நா மனித உரிமைகள் பேரவை உள்ளது. குறிப்பாக மேற்குலகின் நலன்களைத்தான் அது அதிகம் உயர்த்திப்பிடிக்கும். உக்ரைன் விவகாரத்தை உயர்த்திப்பிடிக்கின்ற மனித உரிமைகள் பேரவை தமிழர் விவகாரத்தை தாழ்த்திப்பிடிக்கும். உக்ரைன் விவகாரம் உடனடியாகவே குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டது. தமிழர் இன அழிப்பு பாராமுகமாக உள்ளது.

தமிழ் இன அழிப்பு விவகாரத்தை அது கிடப்பிலும் போடாது மேலையும் தூக்காது என்பதே இன்றைய நிலை. இங்கு தமிழ் மக்களுக்குச் சாதகமான விடயம் மனித உரிமைகள் பேரவை போர்க்குற்ற விவகாரக்கோவையை மூடாது என்பதே. இலங்கைத் தீவில் புவிசார் அரசியலும் பூகோள அரசியலும் இருக்கும் வரை கோவையை அது மூடப்போவதில்லை. தேவைக்கேற்ப அதனை பயன்படுத்தவே பார்க்கும். மறுபக்கத்தில் இலங்கை மீதான இந்திய நலன்களை மீறியும் அது செயற்படப்போவதில்லை. எதிலும் பிராந்தியக் குறுக்கீடு என்பது தமிழ் மக்களின் தலைவிதி.

உக்ரைன் விவகாரத்தில் இவ்வாறான பிராந்திய வல்லரசுக்குறுக்கீடு இருக்கவில்லை. அதனால் நினைத்ததைச் செய்யும் சூழல் மேற்குலகிற்கு இருந்தது. அங்கு அனைத்தையும் செய்ய முடிந்த மேற்குலகிற்கு இங்கு அனைத்தையும் செய்ய முடியாது. கவிஞர் சேரன் தனது கவிதையில் குறிப்பிட்டது போல "இந்தியாவின் நுனியில் இலங்கையை ஏன் வைத்தாய்" என கேட்பதைத்தவிர வேறு தெரிவில்லை.

ரணில் மேற்குலகின் மிகப்பெரிய சொத்து. அவரைப் போல மேற்குலக விசுவாசியை இலங்கையில் காண முடியாது. எனவே, ரணில் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த அவை என்றைக்கும் விரும்பப்போவதில்லை.

தென்னிலங்கை விவகாரத்தில்கூட ரணிலின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை மேற்குலகம் கண்டுகொள்ளப்போவதில்லை. ராஜபக்ஷாக்கள் இலங்கையின் பொருளாதாரத்தை வங்குரோத்து அடையச் செய்தார்கள் என்றால் ரணில் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களையே இல்லாமல் செய்கின்றார். அவர் தேர்தல் எவற்றையும் நடத்தமாட்டார். அது தொடர்பான உயர்நீதிமன்றக் கட்டளைகளையும் மதிக்கமாட்டார். அரசியல் யாப்பு ஏற்பாடுகளைதான் நினைத்தவாறு மீறுவார். ஜனநாயகப் போராட்டங்களை மிருகத்தனமாக அடக்குவார். இவை எவற்றையும் மேற்குலகம் கண்டுகொள்ளப் போவதில்லை.



ரணில் இல்லையென்றால் "இந்தோ - பசுபிக்" மூலோபாயத் திட்டத்தை சிறிதுகூட மேற்குலகத்தால் நகர்த்த முடியாது. சீனா மாத்திரமல்ல பெருந்தேசிய வாதமும் "இந்தோ - பசுபிக்" திட்டத்திற்குச் சாதகமாக இல்லை. பெருந்தேசிய வாதம் மேற்குலக எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு என்கின்ற தூண்களினால் கட்டியெழுப்பப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

கள யதார்த்தம் காரணமாக சீனாவின் "பட்டுப் - பாதை" திட்டத்திற்கு ரணில் குறிப்பிட்டளவு இடம் கொடுப்பார். அதனை மேற்குலகம் குறிப்பிட்ட நிலை வரை சகித்துக் கொள்ளும். ஆனால் மேல்நிலை பெறுவதை எப்படியும் தடுக்கவே பார்க்கும். இந்தியாவைப் போல இலங்கைத் தீவில் தேசிய பாதுகாப்பு பிரச்சினை மேற்குலகத்திற்கு குறைவு. சீனா ஆதிக்கம் தொடர்பாக இந்தியா கொஞ்சம் பாயும்தான். ஆனால், சோடாப் போத்தல் காஸ் போல உடனேயே அடங்கிவிடும். சீனக்கப்பல் விவகாரத்தில் அடங்கினது போல இலங்கைத்தீவின் கள யதார்த்தமும் சீன வர்த்தக நலன்களும், எல்லை விவகாரங்களும் இந்தியாவை எப்போதும் கட்டியே வைத்திருக்கும். இதனால் நேரடி நடவடிக்கைகளை விட மறைமுகநடவடிக்கைகளிலேயே இந்தியா அதிக கவனம் செலுத்தும். மறைமுக நெருக்கடிகளையே கொடுக்கும். இலங்கைத்தீவில் பிடுங்கக் கூடியவற்றை பிடுங்கப் பார்க்கும். தன்னால் முடிந்தளவு இலங்கைத்தீவின் பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப் பார்க்கும். இதைத்தவிர வேறு எதையும் இப்போதைக்கு செய்யப்போவதில்லை.

ரணில் உள்ர் சட்ட ஒழுங்குகளை மாத்திரமல்ல சர்வதேச சட்ட ஒழுங்குகளையும் தான் நினைத்தபடி மீறுவார். பிராந்திய சர்வதேச சக்திகள் இதனை வேடிக்கையே பார்க்கும். இலங்கை ஆட்சியாளர்கள் முதலில் தமிழ் மக்கள் சார்பான சட்ட ஒழுங்குகளையே மீறினர். பின்னர் இலங்கைத்தீவின் முழு மக்களுக்குமான சட்ட ஒழுங்கை மீறினர். தற்போது சர்வதேசமட்ட ஒழுங்குகளையும் மீறுகின்றனர். நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்கள் சர்வதேச சட்ட அந்தஸ்தைப் பெற்றவை. இலங்கை தான் நினைத்த மாதிரி அதனை மீறுகிறது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீறுகின்றது. இந்தியாவுடனான துறைமுக ஒப்பந்தத்தை மீறுகிறது. ஜெனீவா வாக்குறுதிகளை மீறுகிறது. வல்லரசுகள் இவற்றை வேடிக்கை பார்க்கின்றனவே தவிர எவற்றையும் செய்வதில்லை.

வல்லரசுகள் நேரடிப்போரில் இறங்கும் நிலை தற்போது இல்லை அல்லது மிகக்குறைவு எனக் கூறலாம். அனைத்துமே மறைமுகப் போர்தான். அதாவது இராஜதந்திரப் போர்தான். தமிழ்த்தரப்பு இதனையும் புரிந்து கொள்வது அவசியமானது.

சீனா - இந்திய முரண்பாடு முழுமையான பகை நிலைக்குச் செல்லாது. அதேவேளை முழுமையான நட்பு நிலைக்கும் செல்லாது. முழுமையான பகைக்கு வர்த்தகப் பாதுகாப்பு, எல்லை நலன்கள் விடாது. முழுமையான நட்பு நிலைக்கு செல்வதற்கு புவிசார் அரசியல் நலன்கள் விடாது.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கையும் சந்தர்ப்பசூழ்நிலை வறுமையும்

இன்றைய காலத்தில் வறுமை என்பது தனி மனித பிரச்சினையாக மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் சவால் மிகுந்த ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் மட்டுமன்றி அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் கூட வறுமை என்பது காணப்படுகிறது. உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடையே மதிப்புப் பெறல் போன்ற வாழ்க்கைத்தரத்தை இழந்த நிலை ஆகும்.

வறுமை என்பதை நான்கு வகையாகப் பிரித்து நோக்கலாம். முழுமையான வறுமை, ஒப்பிட்டு ரீதியான வறுமை, சந்தர்ப்ப சூழ்நிலை வறுமை மற்றும் பரம்பரை ரீதியான வறுமை. அந்த வகையில் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ளது. சந்தர்ப்ப சூழ்நிலை வறுமை எனவும் குறிப்பிடலாம். பொருளாதார நெருக்கடி, தொழில்வாய்ப்பு இழப்பு ஏரிபொருள் விநியோகம், உணவுப் பணவீக்கம் என்பவற்றின் விளைவாக உணவுப்பணவீக்கம் அதிகரித்துள்ளது. விவசாய உற்பத்திகளின் வீழ்ச்சி, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பெற்ற கடன்களின் அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாக கடந்த 2022 இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்தது. கொவிட்-19 பெருந்தொற்றை அடுத்து அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.



சயனிகா ஸ்ரீகாந்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தற்போது நாட்டில் வறுமை அதிகரித்துள்ள நிலையில் போசாக்கு குறைபாடான சமூகமொன்று உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பால், தேநீர் குடித்து வந்த பல பிள்ளைகளுக்கு அது இப்போது கிடைப்பதில்லை. ஆரோக்கியமான காலை உணவும் இப்போது இல்லாமல் போய்விட்டது. உணவு வகைகளில் போசாக்கின் அளவு குறைந்துள்ளதோடு உணவுகளின் புரதத்தின் அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகளவில் உயர்ந்துள்ளது. உதாரணமாக, 80 ரூபாய்க்கு கிடைத்த 1KG அரிசியின் விலை 220 ரூபாய், 1KG பால்மா பெட்டியின் முந்தைய விலை 950 ரூபாய். தற்போதைய விலை 2680 ரூபாய். கோழி முட்டை தற்போது 55 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. சில காலங்களுக்கு முன்னர் 10 ரூபாய்க்கு ஒரு முட்டை கிடைத்தது. இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவு பல மடங்காக அதிகரித்துள்ளது. பலர் குடும்பத்திற்கான வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் தடுமாறுகின்றனர். இதன் காரணமாக குறைந்தபட்ச நுகர்வுத் தேவைகளைகூட நிறைவு செய்ய முடியாதவர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்துள்ளது. இதனால் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோரின் தொகையும் கூடியுள்ளது.

இலங்கையில் தனிநபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக செலவு செய்ய வேண்டிய பணத்தொகையின் பெறுமதி திடீரென அதிகரித்துள்ளது. குறைந்த சம்பளம் பெறும் அரச ஊழியர்களின் நிலை இப்படியென்றால். நாளாந்தம் வருமானத்தைத் தேடிக்கொள்பவர்களில் கணிசமானவர்களின் நிலை சில வேளைகளில் இதனை விடவும் கவலைக்குரியதாக உள்ளது. குடும்பமொன்று ஒரு வேளை சாப்பாட்டுக்காக உட்கொள்ளும் உணவின் அளவு குறைந்துள்ளது. மூன்றுவேளை உணவில் இரண்டு வேளை உணவினையே பெற்றுக் கொள்கின்றனர். இந்த வறுமையானது மக்கள் மத்தியில் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளினை மட்டுமல்லாது பல்வேறு உள ரீதியான பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கின்றது. அதாவது வறுமையின் பிடிக்குள் வாழ்கின்ற பொழுது ஒருவனின் தனிமனித அந்தஸ்து மட்டுமன்றி அவர் சார்ந்த ஒழுக்கம், பண்பாடு என்பன பாதிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க வறுமையின் முக்கிய அடையாளங்களில் ஒன்று, மகிழ்ச்சி குறைவடைவதால் நாட்டில் வறுமை அதிகரிக்க அதிகரிக்க நபர்களிடையே மகிழ்ச்சி குறைவடையும் ஆபத்து உள்ளமை. வறுமையான குடும்பங்களில் நோய்கள் மற்றும் தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம் இருக்கும். தன்னம்பிக்கை இழக்கும் நிலையும் காணப்படுகிறது. தற்போதைய நிலையில் மக்களுக்கு ஆறுதலளிப்பதென்றால், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அரசு குறைக்க வேண்டும். ஆனால், அதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளது.



எனவே அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் மக்களுக்கு பணம் மற்றும் உணவுப்பொருட்களை நிவாரணமாக அரசு வழங்க வேண்டுமெனவும் பாடசாலை மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவுத் திட்டத்தை வழங்க வேண்டும். பொருளாதார நெருக்கடியும் வறுமையும் நாட்டில் மிகமோசமாக ஏற்பட்டுள்ளது. தற்போதைய காலகட்டத்தில் மக்களுக்கு உள நெருக்கீடு, மன அழுத்தம் அதிகமாக ஏற்படும். அதனால், குடும்பத்தில் பிரச்சினைகளும் சண்டைகளும் உருவாகலாம். மறுபுறம் திருட்டு மற்றும் குற்றச் செயல்கள் போன்றவை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களும் அதிகமாகும். எனவே, மக்களுக்கு உளவள ஆலோசனைகள் வழங்கும் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்துவதோடு மேற்குறிப்பிட்ட பாதக விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்கான விழிப்புணர்வுகளை வழங்குவதிலும் அவசியமாகும். ■

# கிளிநொச்சியின் எதிர்காலம் 09

கருணாகரன்




“கரைச்சிப் பிரதேச சபையின் பணிமனை வளாகத்துள் கடைத்தொகுதியை அமைப்பது தவறு. இதற்கான தீர்மானத்தை எடுத்த முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையிலான தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளித்த ஏனைய உறுப்பினர்களும் வரலாற்றுத் தவறினை இழைத்துள்ளனர்” என்று கடந்த சில வாரங்களுக்கு முன்பு குறிப்பிட்டிருந்தோம். அதில் எந்த அடிப்படையில் இது தவறு என்று தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

ஆனாலும் “அது தவறல்ல” என்று இன்னும் சிலர் கருகிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பு கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சியைப் பற்றி அதிகமாக அக்கறைப் படுவதாகச் சொல்லிக் கொள்ளும் பாடசாலை அதிபர் ஒருவர் இது பற்றி விவாதித்தார்.

“அந்தப் பதிவு நியாயமற்றது” எனப் பலர் சொல்கிறார்கள் என்றார். ஏனென்றால் “சபைத் தீர்மானத்தின் அடிப்படையில்தான் அந்தக் கடைத்தொகுதி அமைக்கப்படுகிறது. அதற்கான அனுமதியை உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண ஆணையாளர் உட்பட அனைவரும் வழங்கியுள்ளனர். அதைவிட மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக உள்ள இடத்தில் நடக்கும் வேலையை மாவட்டத் திட்டமிடல் அதிகாரிகளும் மாவட்டச் செயலரும் காணாதிருக்க வாய்ப்பில்லை. மேலும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்கூட இதைப்பற்றிய எதிர்மறைக் கருத்துகள் மேலெழவில்லை. இப்படியெல்லாம் இருக்கும்போது எந்த அடிப்படையில் இது தவறான நடவடிக்கை என்று சொல்லமுடியும்?” என்று கேட்டார்.

இதைக் கேட்கும்போது சிரிப்பு வந்தது. சிரித்தேன். அவருக்கு கடுப்பேறியது.

குறித்த மண்பற்றாளருக்கும் அவரையொத்தவர்களுக்கும் ஒன்றைச் சொல்லிக் கொள்ளலாம். அல்லது அவரிடம் ஒன்றைக் கேட்கலாம்.

“இப்பொழுது பிரதேச சபையின் தலைமைப் பணிமனை இருக்கும் இடத்தில்தானே முன்பு கிளிநொச்சியின் பொதுச்சந்தையும் அதையொட்டிய கடைத்தொகுதியும் பேரூந்துத் தரிப்பிடமும் இருந்தன. அவை எதற்காக இடமாற்றம் செய்யப்பட்டன? அப்படி இடமாற்றாமல் தொடர்ந்தும் சந்தையாகவும் வணிக வளாகமாகவும் பேரூந்துத் தரிப்பிடமாகவும் அதை விட்டிருக்கலாமே!

பணிமனையை அமைக்க வேண்டும் என்று அவை வேறிடத்துக்கு இடம்மாற்றப்பட்டிருந்தால் பிறகு ஏன் திரும்பவும் பணிமனை வளாகத்துள் கடைத்தொகுதி? அதாவது எதற்கு வணிக மையம்?

வணிக மையத்தை அமைப்பதற்குத்தான் 300 மீற்றரில் பொதுச் சந்தை உள்ளதே. அதற்குள் கடைத் தொகுதியை அமைப்பதற்குப் போதிய இடமும் உண்டே. அப்படியிருக்கும்போது எதற்காகப் பணிமனைக்குள் கடைத்தொகுதி?

அடுத்தது, “சபைத்தீர்மானம் உள்ளது. பெரும்பான்மைத் தரப்பின் ஆதரவு இருக்கிறது” என்று சொல்லிச் சமாளிக்க முடியாது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் சிங்களப் பெரும்பான்மை என்ன செய்து கொண்டிருக்கிறது?

நியாயத்துக்கு மாறாகவும் ஜனநாயகத்துக்கு விரோதமாகவும் தன்னுடைய பெரும்பான்மையைப் பயன்படுத்தி அடாவடி செய்கிறது. தமிழ் பேசும் மக்களைப் பற்றித் தவறான தீர்மானங்களை எடுத்து ஜனநாயகத்தின் பேரால் அதிகாரத்தைப் பிரயோகித்து நடைமுறைப்படுத்துகிறது. பிழையான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகிறது.

நாட்டின் நலன், மக்களின் உரிமைகள் பற்றியெல்லாம் அக்கறைப்படாமல், கட்சி நலன், தலைமையின் நலன் என்ற அடிப்படையில் தவறான நடவடிக்கைகளுக்கும் பிழையான திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

ஏறக்குறைய அதே மாதிரித்தான் இங்கும் நடக்கிறது. தங்களிடம் பெரும்பான்மையின் ஆதரவுண்டு என்று சொல்லிக்கொண்டு, தவறான தீர்மானங்களை எடுக்கிறார்கள். சரியான கருத்துகளும் நீதியும் ‘பெரும்பான்மையின் எதிர்ப்பு” என்ற அடிப்படையில் நிராகரிக்கப்படுகிறது.

ஆக மொத்தத்தில் அதிகாரம் என்று வந்துவிட்டால் மக்களுக்கு விரோதமாகச் செயற்படுவதில் சிங்களத்தரப்புக்கும் தமிழ்த்தரப்புக்கும் இடையில் வேறுபாடில்லை. இதனால்தான் தமிழரசுக் கட்சியை எப்போதும் வலதுசாரியக் கட்சி, முதலாளித்துவத்துக்கு ஒத்தோடும் கட்சி என்று கூறுவதுண்டு. மக்களின் நலனைவிட தமது நலனையும் தமக்கு மேலுள்ள தரப்புகளின் நலனையும் பாதுகாக்க முற்படுவதே அதனுடைய இயல்பு.

அப்படிப் பெரும்பான்மைக் கணக்கில் தவறாக எடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஒன்றுதான் இந்தக் கடைத்தொகுதியுமாகும். இன்னொன்று ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் வணிக வளாகம்.

அது இன்னும் 10 ஆண்டுகள் கடந்தாலும் உருப்படாது. ஏனெனில், அதன் திட்டமே தவறானது. சுற்றயலில் மக்கள் இல்லை. போதிய நீர் ஆதாரமில்லை. மட்டுமல்ல, அந்தப் பிரதேசத்தில் எத்தகைய திட்டம் வெற்றியளிக்கும் என்று ஆராய்ந்து தீர்மானிக்காமல் பாமரத்தனமாக - எழுந்தமானத்துக்கு உருவாக்கப்பட்ட திட்டமே அந்த வணிக வளாகமாகும். அதனால்தான் அது தோல்வியைக் கண்டுள்ளது.

அங்கே அமைக்கப்பட்டுள்ள நடராஜர் சிலை ஏறக்குறைய அநாதரவான நிலைக்கு வந்துவிட்டது. ஆகவே, அதற்கெனச் செலவளிக்கப்பட்ட நிதி வீண் விரயம். அவ்வளவும் மக்களின் வரிப்பணம்.

**இதற்கெல்லாம் யார் பொறுப்பு?**

உண்மையில் கரைச்சிப் பிரதேச சபையின் பொறுப்பிலிருக்கும் பல வீதிகள் மிக மோசமான நிலைக்குள்ளாகியுள்ளன. நீண்டகாலமாக இவை புனரமைக்கப்படவில்லை. எல்லாவற்றையும் புனரமைக்க முடியாது விட்டாலும் கூடுதலான மக்கள் பயன்படுத்துகின்ற வீதி, பாடசாலைக்குச் செல்லும் வீதிகள் என்ற அடிப்படையில் தேர்வு செய்தாவது அவற்றைப் புனரமைத்திருக்கலாம்.

இப்படி வீணாக்கிய பணத்தை அவற்றுக்குப் பயன்படுத்தியிருந்தால் மக்களுக்கு நன்மைகள் கிடைத்திருக்கும்.

இதைவிட பிரதேச சபைக்கென நல்லதொரு மண்டபம் கிடையாது. நல்லதொரு பணிமனையில்லை. பணிமனை வளாகமுமில்லை. தற்போதிருக்கும் மண்டபத்தில் 300 பேர் கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகள் எதையும் நடத்த முடியாது. மின்விசிறியைப் பொருத்தக்கூட போதிய உயரம் அதற்குக் கிடையாது. கையை உயர்த்தினால் கூரை முட்டும். இந்த மண்டபம்கூட 2010 க்குப் பிறகு கட்டப்பட்டதே. போர்க்காலத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக மண்டபம்போலவே தட்டையாக அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மணிநேரம் அதற்குள் இருக்க முடியாது. காற்றோட்டம் கிடையாது. சீரான ஒலி அமைப்பு வசதிகூட இல்லை.

மண்டபம் என்பது அதிகமானோர் கூடுமிடம். நிகழ்ச்சிகள் நடக்குமிடம் என்ற அடிப்படையில் காற்றோட்ட வசதி, ஒலி, ஒளிக்கான ஏற்பாடுகள், பார்வையாளர் இருக்கைகள், மேடை அமைப்பு எனப் பலவும் சீராக அமைக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கோ இவை அனைத்தும் கவனிக்கப்படவில்லை.

யாழ்.மாநகர சபைக்கான கட்டடத் தொகுதி பிரமாண்டமானமுறையில் மிக அழகாக அமைக்கப்பட்டு வருகிறது. இது பாராட்டப்பட வேண்டியது. பலரும் கவனம் கொள்ள வேண்டியது.

வவுனியாவிலும் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் சிறப்பான நகர மண்டபங்கள் உள்ளன.

**கிளிநொச்சியில்?**

பிரதேச சபையோ நகர சபையோ மாநகர சபையோதான் அந்தப் பிரதேசத்தின் முகமாகும். அதுதான் அதன் அடையாளம். உலகம் முழுக்க இதொரு அடிப்படை. இதைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

நகர சபையாக கிளிநொச்சியைக் கனவு காண்கிறோம். அப்படிக் கனவு காண்பதாக இருந்தால் அதற்கான அடிப்படைகள் என்ன என்று புரிந்து கொள்ள வேண்டும்.

(21 ஆம் பக்கம் பார்க்க...)

**கடந்த ஜூன் மாதம் முதல், தொடர்ச்சியாக வெளி நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டிருந்தமையால், தீம் புனல் வாசகர்களுடன் பகிர்ந்துகொண்ட முதல் சந் திப்புத் தொடரை கடந்த மூன்று மாத காலம் எழுத முடியாமல்போய்விட்டது.**

# பத்து வயதில் வானொலியில் பிரவேசித்து உலகெங்கும் நேயர்களை சம்பாதித்த பி.எச்.அப்துல் ஹமீத்



## 41 முதல் சந்திப்பு

முருகபூபதி

எழுத்துலகில் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கும் என்னை, மீண்டும் குறிப்பிட்ட தொடரை எழுதத்தூண்டிய ஒரு வழிப்போக்கன் பற்றியே இந்தப்பதிவில் சொல்கின்றேன்.









தான் வானலைகளில் ஒரு வழிப்போக்கன் மாத்திரமே என தன்னடக்கத்தோடு சொல்லி வந்திருப்பதுடன், கடந்த அரைநூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தனது பயணத்தில் சந்தித்த சாதாரண மனிதர்கள் தொடக்கம் பேராளுமைகள் வரையில் தனது மனப்பதிவுகளை எழுதியிருக்கும் எமது இனிய அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் எழுதியிருக்கும் நூலின் நான் வதியும் கடல் சூழ்ந்த கண்டத்தில் பரவலாக அறிமுகமாகிக்கொண்டிருக்கும் தருணத்தில் இதனை எழுதுகின்றேன்.

பாடசாலைப்பருவத்தில் அரைக்காற் சட்டையுடன் இலங்கை வானொலி கலையகம் பிரவேசித்து, படிப்படியாக எவ்வாறு வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் தன்னை வளர்த்துக்கொண்டார் என்பதை விளக்குவதே அவர் எழுதியிருக்கும் நூல். இவரின் குரல் மேற்குறித்த ஊடகங்களில் மாத்திரமன்றி, திரைப்படங்களிலும் விமானங்களிலும் ஒலித்தது.

அவரது நூல் பற்றிய எனது வாசிப்பு அனுபவத்தை பின்னர் விரிவாக எழுதுவேன்.

1968 களில் நான் எனது பாடசாலைப் படிப்பினை முடித்துக்கொண்டு, வேலை தேடும் படலத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இலங்கை வானொலியில் பி.எச்.அப்துல் ஹமீத் மதுரமான குரலைக்கேட்டேன்.

நீர்கொழும்பில், எங்கள் வீட்டருகில் வசித்த ஜோசப் மாஸ்டர், “அப்துல் ஹமீத், தன்னுடைய பாடசாலையில் தனது அபிமானத்துக்குரிய மாணவன்” என்று பெருமையோடு சொல்வார்.

வானொலியில் அப்துல் ஹமீதின் தெளிவான தமிழ் உச்சரிப்போடு தனது உச்சரிப்பினை ஒப்பிடும், எங்கள் ஊர் பெரும்பான்மை மக்களின் தமிழ் உச்சரிப்பில் பேசும் ஜோசப் மாஸ்டர், “ஹமீத் ஒரு இஸ்லாமிய சமூகத்திலிருந்து வந்த பிள்ளையாகவிருந்தாலும் அவர்களின் கொழும்புத்தமிழ் பேசாமல், என்ன அழகாக தேன்வந்து காதில் பாய்வதுபோன்று பேசுகிறான் பாரும்” என்பார் ஜோசப் மாஸ்டர்.

தினமும் இலங்கை வானொலியில் நாம் கேட்டுவந்த மதுரமான குரலுக்குச்சொந்தக்காரரை முதல் முதலில் வானொலி கலையகத்தின் வாசலில்தான் 1972 ஆம் ஆண்டு சந்தித்தேன்.

இவரை எனக்கு அன்று அறிமுகம் செய்து வைத்தவர் மற்றும் ஒரு அறிவிப்பாளரான நண்பர் வி.என்.மதியழகன்.

மதியழகன் நடத்திய சங்கநாதம் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக நான் சென்ற சமயம் இச்சந்திப்பு நிகழ்ந்தது.

அப்துல் ஹமீத் அக்காலப்பகுதியில் நடத்தி வந்த பாட்டுக்குப்பாட்டு நிகழ்ச்சி, இலங்கையில் தமிழ் நேயர்கள் வாழும் இல்லங்களில் மாத்திரமன்றி கடல் கடந்து தமிழகத்திலும் ஒலித்துக் கொண்டிருந்தபோது, எங்கள் ஊர் இளம் பாடகர் விஜயரத்தினம் என்பவரை வானலைகளில் முதல் முதலில் அறிமுகப்படுத்திய பெருமை பற்றி நாம் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

பாட்டுக்குப்பாட்டு போட்டியில் இறுதிச் சுற்றில் தெரிவான விஜயரத்தினத்திற்கு ஒரு புத்தம் புதிய வானொலிப்பெட்டி பரிசாக கிடைப்பதற்கும் வழிசமைத்தவர்தான் இந்த அன்பு அறிவிப்பாளர்.

எதிர்பாராத வகையில் அந்த இளைஞர் 1975 ஆம் ஆண்டு, ஒரு கொலைக்குற்றத்திற்காக கைதாகி சிறைசெல்லநேரிட்டு, யாழ்ப்பாணத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். அங்கே பாட்டுக்கு பாட்டு விஜயரத்தினம் என்றே அறிமுகமாகியிருந்தார். சக கைதிகள் மத்தியில் அவர் பாடினார்.

அவரது நன்னடத்தையினால், வெகுவிரைவில் விடுதலையாகி வந்தபின்னரும், எங்கள் ஊர் நிகழ்ச்சிகளில் பாடிக் கொண்டிருந்தார்.

தன்னை பாட்டுக்குப்பாட்டு மூலம் அறிமுகப்படுத்திய பி.எச்.அப்துல் ஹமீத்தை என்றென்றும் நன்றியுடன் நினைவுகூர்ந்தவாறிருந்த அந்த இளம் கலைஞர் சில வருடங்களுக்கு முன்னர் மறைந்துவிட்டார்.

எனினும் எங்கள் நீர்கொழும்பூரில் அந்த விஜயரத்தினம் என்ற இளம் பாடகரின் பெயருக்கு முன்னால் அப்துல் ஹமீத் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்திய பாட்டுக்குப் பாட்டு நிலைத்திருக்கிறது.

“பாட்டுக்குப்பாட்டு நிகழ்ச்சியின் மூலம் மட்டும் என்னை இனங்காண்பதை நான் விரும்பவில்லை. இது என்னுடைய தாழ்மையான கருத்து. க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக நட்சத்திர அறிவுக்களஞ்சியம், பரராஜசிங்கம் நடத்திய இலக்கிய தரத்தினைக்கொண்ட இதய ரஞ்சனி என்பன அறிவுபூர்வமான நிகழ்ச்சிகளாக இருந்தன.

ஆனால், குளியலறை சங்கீத ஞானம் உடையவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்ற நோக்குடைய நிகழ்ச்சியாகவே பாட்டுக்குப் பாட்டினை ஆரம்பித்தோம்.

எத்தனையோ கலைஞர்கள் வெளிச்சத்திற்கு வந்தார்கள். புதிய இசையமைப்பாளர்கள் உருவானார்கள். அவர்களுக்கு ரசிகர்கள் உருவானார்கள்.

இதற்கு அடித்தளம் அமைத்தது பாட்டுக்குப்பாட்டு என்று இதன் ரிஷி மூலத்தைச் சொன்னவர் எங்கள் அன்பு அறிவிப்பாளர்.

“என்னை உலக அறிவிப்பாளர் என்று பலர் சொல்கிறார்கள். உலக அறிவிப்பாளர் பட்டத்துக்கும் கஞ்சிப்பானை இம்ரானுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. கஞ்சிப்பானை இம்ரான் என்ற பெயரை யாரோ வைத்தார்கள். அதை பலரும் வழிமொழிந்தார்கள்.

உண்மையில் கஞ்சிப்பானைக்கும் இம்ரானுக்கும் எந்தத் தொடர்புமில்லை. அதைப்போல உலக அறிவிப்பாளர் என்று யாரோ ஒருவர் சொல்ல, அதை எல்லோரும் வழிமொழிகிறார்கள்.

ஆனால், நான் உலக அறிவிப்பாளர் அல்ல. உலக நாடுகள் பலவற்றுக்கும் போயிருக்கிறேன். ஆனால், உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் பேசக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லை.” இவ்வாறு மிகுந்த தன்னடக்கத்துடன் தன்னை வெளிப்படுத்துபவர்தான் உலகெங்கும் நேயர்களைக்கவர்ந்த இந்த அன்பு அறிவிப்பாளர்.

அப்துல் ஹமீதின் தன்னடக்கமே அவரது பெரிய பலம். அத்துடன் மற்றவர்களுக்கும் முன்மாதிரியானது.

பல வருடங்களுக்கு முன்னர் கே.எஸ்.பாலச்சந்திரன் ‘கரையைத் தேடும் கட்டுமரங்கள்’ என்ற புதினத்தை எழுதியிருந்தார்.

இதற்கு முன்னுரை எழுதியவர் அப்துல் ஹமீத். இந்தப்புதினம் எனக்கு படிக்கக் கிடைக்காத அக்காலப்பகுதியில் அந்த முன்னுரை தமிழ் நாடு சுபமங்களா இதழில் வெளியாகியிருந்தது.

அதுவரையில் எனக்கு அறிவிப்பாளராகவே தென்பட்டிருந்த அப்துல் ஹமீதின் இலக்கிய ஞானம் பெருவியப்பாகவிருந்தது.

தாமதிக்காமல், இவருடைய தொலைபேசி இலக்கம் தேடிப்பெற்று எனது வாழ்த்துகளை சொன்னேன்.

2007 ஆம் ஆண்டு கனடாவில் கே.எஸ். பாலச்சந்திரனை சந்தித்தபோது அவரிடத்திலும் சிலாகித்துச் சொன்னேன்.

எழுத்தாற்றலும் இலக்கியவுணர்வும் மிக்க அப்துல் ஹமீதிடமிருந்து மேலும் பல நூல்களை நாம் எதிர்பார்க்க முடியும். ■

# பெண் அடிமைத்தனமும் பெண் கல்வியின் முக்கியத்துவமும்



சொக்கலிங்கம் லோஜினி

பெண்ணடிமைத்தனம் என்று குறிக்கப்படுவது வரலாற்றின் பெரும் பகுதியில் பெண்கள் சமவுரிமை, வாய்ப்புக்கள் பெறாமல் தாழ்வுநிலையில் வாழ்ந்ததையும் அவர்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகளையும் இதை ஏதுவாக்கிய சமய, சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பையும் குறிக்கிறது. சில சமூகங்களைத் தவிர பெரும்பான்மைச் சமூகங்கள் நெடுங்காலமாக ஆண் ஆதிக்க சமூகங்களாகவே இருந்து வந்துள்ளன. அநேக சமூகங்களில் பெண்களின் மனித, உளவியல், சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பிற உரிமைகளும் சுதந்திரங்களும் ஆண்களுக்கு இணையாக அமையவில்லை. பல சமூகங்களில் பெண்கள் ஆண்களுக்கு பணி செய்யும் அல்லது ஆண்களின் கட்டுப்பாடுகளுக்குரிய அல்லது ஆண்களைச் சார்ந்து இருக்கும் மனிதர்களாகவே அடிமைத்தனமாகப் பயன்படுத்தப்பட்டார்கள். சுதந்திரமற்றவர்களாகவும் ஆணாதிக்கத்துக்கு அடிமைப்பட்டவர்களாகவும் இருக்கும் நிலையை பெண்ணடிமைத்தனம் எனலாம்.

பெண்களுக்கு சொத்துரிமை, கல்வியுரிமை, வேலையுரிமை, பேச்சுரிமை மற்றும் அடிப்படை மனித உரிமைகள் இருக்கவில்லை. இதனால் பெண் சிசுக்கொலை, சிறுவர் திருமணம், சீதனம், உடன் கட்டையேறுதல், மறுமண மறுப்பு, மணவிலக்கு மறுப்பு, உடமை மறுப்பு, கொத்தடிமையாக்கல், கோயிலுக்கு அடிமையாக்கல் என பல வழிமுறைகளில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. தற்காலத்தில் பெண்களின் நீண்ட போராட்டத்தின் பின்பு இந்நிலை பெரிதும் மாறிவருகின்றது.

பெண்கள் கடல் கடந்து செல்லக்கூடாது என்ற வழக்கம் இருந்ததாக 'முந்நீர் வழக்கம் மகடுவோடில்லை' என்று தொல்காப்பியம் குறிக்கிறது.

உலகின் மொத்தக் குடித்தொகையில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்க அளவு இருந்த போதிலும் ஆரம்பகாலச் சமூகங்களில் கல்வியறிவு அற்ற பெண்களின் பங்கு கணிசமான அளவு இருந்தது. பெண்கள் தமது குடும்ப நலனுக்காகவும் குடும்ப அங்கத்தவர்களின் திருப்திக்காகவும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த நிலையைக் காண முடிந்தது. சமூக வாழ்வின் நம்பிக்கைகளும் இறுக்கமான மரபுவழி பழக்கவழக்கங்களும் பெண்களை இத்தகைய நிலைக்கு ஆளாக்கியது. பெண்களைத் தெய்வமாகப் போற்றிய தமிழ் மரபுதான் பெண்களுக்கு ஓர் எல்லைக்கோட்டையும் ஏற்படுத்தியது. பெண்களை தெய்வ நிலைக்கு உயர்த்தி புனிதத் தன்மை வாய்ந்த இயற்கையின் கூறுகளை ஒப்புமையாக்கியதன் விளைவுதான் பெண்களின் வளர்ச்சிக்கு ஓர் வரையறையை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது. இனப்பெருக்கத்தின் செயற்பாட்டிற்கு ஆணும் பெண்ணும் சம பங்குதாரர்களாக விளங்கியபோதும் 'தாய்மைக்கு அணிகலன் குழந்தைப்பேறு' என்பதை பெண்களுக்கு பொருத்திப் பார்த்த சமூகம் பெண்ணை மனித வள விருத்தியோடு தொடர்புபடுத்தவில்லை. குழந்தைகளை பெறுதல், வளர்த்தல், குடும்பத்திலுள்ள முதியோர்களைப் பேணிப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு வகைப்பட்ட பொறுப்புகள் பெண்களுக்கு இருந்தமையால் பெண்களின் குடும்ப, சமூக, பொருளாதார தொடர்புகள் ஆண்களைவிட வேறுபட்டதாக விளங்கின. பெண்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியுள்ள போதிலும் அவர்களது திறமைகள் வெளியில் தெரியாத வகையில் பல விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக மதம் என்ற போர்வையில் பெண்கள் நசுக்கப்பட்டார்கள். மதரீதியான பல நம்பிக்கைகள் பெண்களை வீட்டில் பூட்டி வைத்தன. இதனால் பெண்களின் முன்னேற்றம் பல வழிகளிலும் தடைப்பட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இதனால் பெண் கல்வி பின்னடைவதற்கு மத நம்பிக்கைகளும் பெரும் காரணமாக அமைந்தன எனலாம். பெண்களைப் பாரபட்சமாக நடத்துவதற்கு எதிராக பல சட்டங்கள் இருந்த போதிலும் அச் சட்டங்கள் தொடர்பாக பெண்களால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எங்கெங்கு என்னென்ன சட்டங்கள் உள்ளன என்பதைக்கூட அறியாத வகையில் பெண்கள் இருந்தார்கள்.

மனித வாழ்க்கை ஆண், பெண் என்ற இருவேறு பால்நிலை சார்ந்த உறவுகளின் இணைப்பிலேயே இயக்கம் பெற்று வந்துள்ளது. இதில் ஆண் என்பவன் முதன்மைப்படுத்தப்பட்டதால் பெண் அவனாலும் சமூகத்தாலும் அடக்கப்பட்டாள். இயற்கை சார்ந்தும் வாழ்ந்த பெண், ஆண் சமூகத்தில் வளர்ச்சி பெற்ற உழைப்பும் உழைப்பு பிரிவினையும் இதனால் வளர்ச்சி பெற்ற அதிகார அதிகரிப்புகளும் ஆணுக்கு சாதகமாகவே மாறியது.

ஆணின் அக்கால உடல் பலத்தால் அதிகாரத்தால் தனித்த சொத்துரிமையாக்கப்பட்டான் . சமூகக் கூட்டு வாழ்வில் வாழ்ந்த பெண் சொத்துரிமை மறுக்கப்பட்ட நிலைக்கு உள்ளானாள். தாய் வழி சமூக அமைப்பில் பெண் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தாள். பின்வந்த நிலவுடமை சமூகத்தில் சொத்துரிமையோடு சேர்த்து பெண்ணும் அடிமையாக்கப்பட்டாள். ஆணுக்குரிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக படைக்கப்பட்டவள் அவனது குறிப்பறிந்து நடக்கப் பழகிக் கொள்வதோடு பாலியல் தேவை, சந்ததி விருத்தி செய்முறை, வீட்டுப் பொறுப்புக்கள் என பெண்ணுக்குரிய கடமைகள் எல்லைப்படுத்தப்பட்டன. அதற்குப் பொருந்தும் வகையில் அச்சமும் நாணமும் மடமும் பயிர்ப்பும் பெண்ணுக்குரிய நான்கு குணங்களாக, படைகளாகவும் பெருமையும் அறிவும் ஆடவர்க்குரியது என தொல்காப்பியம் வகுத்தது.

அச்சம் என்றால் பயம், தயக்கம், மடம் என்பது அறியாமை. நாணம் என்றால் வெட்கப்படுவது, பயிர்ப்பு என்றால் ஆண்கள் தொடும் போது உண்டாகும் உணர்வு இவை பெண்ணின் நாற்குணங்களாகக் கூறப்பட்டது. காரணம் பாலியல் தேவைக்கு ஆணின் விருப்பத்திற்கு இசைவான பெண்ணாக இருப்பதற்கு இத்தகைய குணங்கள் தேவைப்பட்டன. அச்சம் என்ற முதல் வார்த்தையிலேயே பெண் அடிமையாக்கப்பட்டுவிட்டாள்.

'ஆண் சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிக்கொள்ளலாம்' என்றார்கள், மறுபுறத்தில் 'கல் என்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்' என்றார்கள். ஆண் சுதந்திரமானவன், பெண் சுதந்திரமற்றவள், ஆண் எதைச் செய்தாலும் தவறில்லை ஆனால், பெண் ஆணுக்கு எதிராகவே நான்கு குணங்களுக்கு மாறாக எதைச் செய்தாலும் பிழை என்றார்கள். இவை அனைத்தும் பெண்ணின் உடலியல் சார்ந்த நிலையை இலக்கு வைத்தே கூறப்பட்டது. பெண் பிறந்ததிலிருந்தே சுமையாகிறாள். பெண்ணைப் பெற்றவர்கள் அவளை ஒருவனின் கையில் ஒப்படைக்கும் வரை பெரிய பொறுப்பை தலையில் கட்டி வைத்திருப்பது போல் அவதிப்பட்டனர். இவற்றுக்கு அடிப்படையாக அமைந்தது அவளுடைய கருவளம் ஆண், பெண் இணைந்து தவறு செய்தாலும் ஆண் தப்பி விடுவான். ஆனால், பெண்ணின் கருத்தரிக்கும் இயல்பு அவள் தவறு செய்தவள் என வெளி உலகிற்கு காட்டிவிடும். இதனால் பெண்ணின் பெற்றோர், சகோதரர்கள், நெருங்கிய உறவுகள் என அனைவரும் ஒரு தலைப்பட்சமாக குற்றம், அவமானம், பழிச்சொல் அனைத்தையும் அனுபவிப்பார்கள். மொத்தத்தில் பெண்ணின் உடலியல்சார் நிலை அவளைத் தங்கி வாழ்பவர்களாகப் பார்த்து வைத்தது. இவ்வாறான காரணங்களால் பெண் தன்னை சமூகத்திற்கு ஏற்ப இசைவாக்கிக் கொண்டாள்.

தற்போதைய காலத்தில் பெண் அடிமைத்தனம் என்பது சற்றுக் குறைந்து காணப்பட்டாலும் சில சமூகத்தின் அடிப்படையில் சாதி, மதம், இனம் என்பவற்றின் ரீதியிலாக பெண் அடிமைத்தனம் இன்றும் நடந்து கொண்டேதான் இருக்கின்றது. இந்தப் பெண் அடிமைத்தனத்தை முற்றிலும் அழிக்கவேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு சமூகத்திலுமுள்ள மனிதர் என்ற ரீதியில் நாமும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பெண் அடிமைத்தனத்தை இல்லாதொழித்து பெண்களுக்கான முழு சுதந்திரத்தையும் கொடுத்து ஆணுக்கு நிகரானவள் பெண் என்ற சமூக உரிமையை வழங்கி பெண்களைப் போற்ற வேண்டும்.

முன்னைய காலத்திலேயே பெண் அடிமைத்தனம் அதிகளவாக காணப்பட்டது. ஆனால், தற்காலத்தில் பெண்கள் சுதந்திரமாக வெளியுலகுக்கு வந்து சகல துறைகளிலும் தன் சாதனைகளை சாதிப்பவர்களாகவும் வெளிக்காட்டக் கூடியவர்களாகவும் சுதந்திரத்துடன் திகழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் பெண்களின் இந்த முன்னேற்றத்திற்கு கல்வியின் முக்கியத்துவம் மிகப்பெரிய வெற்றியாக அமைந்துள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க...)




சயந்தன் அபிசரண்
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# கட்டுவன் வீரபத்திரர் வசந்தன் ஆட்டம்

வசந்தன் வீரபத்திரர் கூத்து யாழ்ப்பாணத்திலே கட்டுவன் பிரதேச மக்களாலே மிகவும் சிறப்பாக ஆடப்பட்டு வருகிறது. வீரபத்திரர் ஆலயத்தின் புகழையும் இக்கூத்து பாடுகின்றது. உழவுத் தொழிலை பிரதான விவசாயமாகச் செய்யும் மக்களுக்கு வீரபத்திரரின் அருட்கடாட்சம் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி வேளாண்மை தொழில் சிறப்பாகவும் வெப்ப காலங்களில் ஏற்படும் வறட்சியை போக்குவதற்கான மழை வேண்டி இறங்கி ஆடுதலாகவும் கூறப்படுகின்றது. இதற்குள்ளாக மழை இரங்கல் பாடல்களும் வசந்தன் ஆட்டத்தில் காணப்படுகிறது.

“வசந்தன் நாடகம்” என்றும் “வசந்தன் கூத்து” என்றும் சொல்லப்படுகின்ற இந்த வசந்தன் கூத்து 1753 ஆம் ஆண்டு பிறந்த விஸ்வ புலவர் என்பவரினால் ஏற்றப்பட்ட ஒரு பாடல். இது ஒரு மருத நிலத்தை வேண்டிய ஒரு பாடலாக இருந்தது. இந்தப் பாடல் அந்தக் கிராமத்திலுள்ள அத்தனை கோயில்களையும் உள்ளடக்கி இதை ஒரு மரபு வழியாக உள்ளது. இது பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து நலன்கள் பார்த்து ஆடி அந்தக் கிராமத்தில் இருக்கின்ற பெரும்பான்மையான மக்களால் ஆடக்கூடியதொரு முறையாக இந்த ஆட்டம் இருந்தது. அப்போது இடப்பெயர்வுகளில் விலகிக் கொஞ்சம் அழிவடைந்தாலும் இப்பொழுது அது புதிய நிலை பெற்று திரும்பவும் நல்ல முறையிலேயே இப்போது ஆடப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

எனவே, உழவுத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் இந்த வீரபத்திரர் வசந்தன் கூத்தை வீரபத்திரப் புகழ் பாடும் களமாக பாடப்படுகிறது. மழை இல்லாத காலங்களில் மழை பெய்யவும், நோய் நொடிகள் நீங்கி மக்கள் நிம்மதி இக்கூத்து ஆடப்படுகின்றது. இக்கலை வடிவமானது கட்டுவன் வசந்தன் ஆட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது. வசந்தன் ஆட்டமானது ஆடலையும் பாடலையும் பிரதானமாகக் கொண்டுள்ளது. பாடல்களை அவற்றிற்குரிய அந்தந்த தாளத்திற்கேற்ப பாடி ஆடி ஆறு பேர் அல்லது எட்டு பேர் அல்லது 12 பேர் ஜோடி சேர்த்து ஆடுவது பிரதானமாகக் காணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் ஆண்கள் மட்டுமே ஆடிவந்த வசந்தன் ஆட்டத்தை தற்காலத்தில் ஆண்கள், பெண்கள் என இருபாலரும் இணைந்து ஆடும் வழக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. இடப்பெயர்வுகளின் போது ஸ்திரம் போயிருந்த நிகழ்வு தற்போது பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் திருவிழாக்களிலும் ஆடப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிட்டதொரு விடயமாகும். தமிழரின் கிராமிய பண்பாட்டின் ஓர் அழியாத கலை வடிவமாக இருந்து வரும் இந்த வசந்த நாடகமானது வசந்தன் கோலாட்டம், வசந்தன் நாடகம், வசந்தன் சிந்து என பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. மத்தளம், டோல்கி, ஆர்மோனியம் ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

வீரபத்திரர் வசந்தன் ஆட்டம் கோயில் முன்றலும் ஆடப்பட்டு வந்தது. அது மட்டுமல்ல இரவுநேரத்தில் ஆடும்போது தேங்காய் உடைத்து அதன் பாதையில் திரிகளை வைத்தே விளக்கேற்றி ஒளியைப் பெற்று அவ்வெளிச்சத்திலே ஆடப்பட்டிருக்கின்றது. தற்காலத்தில் பாடசாலை, பல்கலைக்கழகங்களின் சில விழாக்களின்போது மேடையில் ஆடும் வழக்கம் காணப்படுகிறது. கட்டுவன் பிரதேசத்தில் உள்ள மக்களினால் இந்தக் கலையானது தலைமுறையாக கடத்தப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் செல்கின்றது. இதன் மூலம்  நம் பண்பாடும் கலாசாரமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கட்டுவன் பிரதேசத்தை சுற்றி பல கோயில்கள் காணப்பட்டாலுமேகூட வீரபத்திரர் கோயில் மீது அப்பகுதி மக்கள் கொண்டுள்ள பக்தியும் அதிகமாகவே காணப்படுகின்றது. நேர்த்தி வைத்து ஆடப்படுவதன் மூலம் தவறுகளைக் காணல் வேண்டி நிறைவேறுதல் நிறைவேற்றுவதற்காக அக்கிராம மக்களின் நம்பிக்கைகள் அம்பாளின் நம்பிக்கைகளோடு பாடப்படுகின்றது.

இசைக் கலைஞர்கள் இசைத்து பாடல்கள் பாடி கோயில்களில் களம் போகும் கலைஞர்கள் (ஆட்டக்காரர்கள்) பிற்பட்ட சந்ததிக்கு ஏற்ப ஜோடியாகப் பிரிந்து ஆட்டங்களினை நின்று பாடல்களின் வசனத்திற்கு இசைவாக தோரணைகளை உடல் மொழியாக வெளிப்படுத்தி கோள்களை மாறி ஒருவர் தட்டி ஆடுவர்.

வீரபத்திரர் வசந்தன் ஆட்டமானது பாடல்களை ஆதாரமாகக் கொண்டு ஆடப்பட்டுக் கொண்டு வருகின்றது. இதன் பாடல்கள் அனைத்தும் செய்யுள்களாகவிருக்கும் அனைத்தும் செய்யுள் களத்திலே எழுதப்பட்டிருக்கும் நல்லதொரு பாடல்களும் விருத்தம், கரு என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. பாரம்பரியமாக கடத்தப்படுகின்றபோது பாரம்பரிய கலைஞர்களால் 22 பாடல்கள் பாடி ஆடப்படுகின்றது. தற்காலத்தில் மேடை நிகழ்வுகளுக்காக ஆடப்படும் போது 15 பாடல்கள் பாடி ஆடப்படுகின்றது. ஒவ்வொரு பாடல்களின் தரு ஒவ்வொரு மெட்டுக்களில் அமைகின்றன. ஒவ்வொரு பாடல்களும் நான்கு வரிகளைக் கொண்ட செய்யுளாக உள்ளன. கரு இல்லாமல் எந்தப் பாடலும் இங்கு அமையப் பெறவில்லை. இங்கு ஆடல் இடம் பெறும்போது மூன்று பிரிவாக ஆடப்படுகின்றது. சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் என ஆலயத் திரு விழாக்களின்களின் போது பத்து நாட்களும் ஆடப்படுகின்றது. இங்கு பாடப்படும் பாடல்கள் ஒவ்வொன்றுமே மக்களின் வாழ்வு சார் அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றன. அந்த நிலையில் வீரபத்திரர் சுவாமியின் புகழ் பாடுவதை தொடர்ந்து தொழிலாளர்கள் வயலில் வேலைக்கு செல்லல், பாடுதல், பறவைகளுக்கு கண்ணி வைத்தல், மழை வேண்டி பாடுதல், அறுவடை செய்தல், அறுவடை தானியங்களைக் கொண்டு சென்று ஆற்றுதல் என பல பகுதிகளாக பாடப்படுகின்றது. வீர பத்திரர் கோயில் திருவிழாவானது சித்திரை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை உள்ள காலப்பகுதிகளில் நடைப்பெறுகின்ற படியினால் அந்த காலப்பகுதியில் வசந்த ஆட்டமாக ஆடப்படுகின்றது.

மக்கள் ஆர்வத்துடன் பார்த்து இரசிப்பார்கள். இக்கலைகள் மேடையில் நிகழ்த்தப்படுவது குறைவு. வசந்தன் கூத்து ஆடும்போது பார்வையாளர்கள் வட்டமாக அமர்ந்து கலைஞர்களை உற்சாகப்படுத்தி கைகளைத் தட்டி மிகவும் ஆர்வத்துடன் கண்டுக்களிப்பார்கள்.

இக்கலையானது பரம்பரைப் பரம்பரையாக ஆடப்படுவதால் இதனை பழக வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். ரசிகர் கதை வகிப்பங்கின்றி இக்கலைகளை கொண்டு செல்ல முடியாது. அவர்களது ஆர்வமும் அவர்களது உற்சாகமும்தான் கலைஞர்களை மென்மேலும் வளர்ப்பதற்கு வழி செய்கின்றன. இந்த வசந்தன் ஆட்டமானது பயபக்தியுடனும் நம்பிக்கையுடனும் வேண்டுதல்களை நிறைவேற்றவும் நிகழ்த்தப்படுவதால் மக்கள் அதிகமாக வருகைத்தருவார்கள். சமூகத்திலும் இக்கலைக்கான மதிப்பும் கௌரவமும்  அதிகமாகவே உண்டு. கலைஞர்களை மதித்து அவர்களை கௌரவப்படுத்தி வருகின்றனர். மேலும் தற்காலங்களில் சமூகம் மத்தியில் இக் கலைக்கு ஆதரவு உண்டு.

இக்கலையைப் பொறுத்த வரையில் நாட்டில் ஏற்பட்ட இடம்பெயர்வு மற்றும் யுத்தமும் பெரிய சவாலான விடயமாக காணப்படுகின்றது. இதன் காரணமாக தமது கற்கை ஆற்றலை உரிய நேரத்தில் உரிய இடத்தில் ஆற்றுகை செய்ய முடியாமல் இந்நிலையில் இருக்கின்றார்கள். கலைஞர்களின் பற்றாக்குறையும் தற்காலத்தில் கலைஞர்களின் வேலைப்பழுக் காரணமாகவும் கலைகளை தொடர்ந்து நிகழ்த்திக்கொண்டு வருவது பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. மக்களும் தமது பொழுதுபோக்கை ஒவ்வொரு விடயங்களில் கவனம் செலுத்துகின்றபடியினால் இவ்வாறான கலைகளை முன்னெடுப்பதில் பாரிய சவால் உள்ளது.

இன்றைய உலகில் இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களின் பாவனைக்கு அடிமையாகியுள்ள மக்கள் நவீன காலங்களில் சினிமா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின்பால் ஆர்வத்தைச் செலுத்துவதால் தமது பாரம்பரிய கலைகள் மற்றும் கலாசாரங்களை மறந்து ஊடகங்களுடனே தங்களது வாழ்க்கையைப் பயணித்து வருவதால் கலைகளின் மதிப்பும் வளர்ச்சியும் தாமதமடைந்துள்ளது.

■

# மலர்ந்த மனம் போதும்

**சிறுகதை**




அனுசுயா தேவி

**ஹா**லில் அமர்ந்து ரீனாவைக் கொஞ்சிக் கொண்டிருந்த போது, வாசலில் ஆளரவம் கூடவே, பெண்களின் கிசுகிசுப்பு.

"இதுதான் வனிதா வீடு! பார்... எத்தனை பெருசா, பங்களா மாதிரி இருக்குன்னு! வர யோசிப்பாதான்... ஆனா, வந்தா முன்னூறு, நானூறு ரூபா அன்பளிப்பா குடுப்பா... அதான் அழைக்கலாம்ன்னு வந்தேன்!"

"அட... இது சித்தி குரலாச்சே?" வனிதா எழுவதற்காக, ரீனாவை சோபாவில் கிடத்திய போது, சித்தி மகள் சுந்தரியின் குரல்...

"வனிதாக்கா வந்தா, அவங்களை வளையல் போட விடுவீங்களாம்மா?"

"நல்ல கதை! எவ விடுவா? தத்துக் கொழந்தையெல்லாம் கொழந்தையாயிடுமா? வயிறு மலர்ந்தவங்கதான் என் மருமகளுக்கு வளையல் போடணும்! வனிதாவை ஏதாச்சும் சொல்லித் தட்டிக் கழிச்சுடுவேன்!"

வனிதாவுக்கு, "திக்" கென்றது. மலர்ந்த மனம் போதும் பஸ்சர் ஒலித்தது. முகக் கலக்கத்தை மறைக்க, வலிந்து புன்னகையை மலரவிட்டபடி, கிரில் கேட்டைத் திறந்து ஒதுக்கினாள் வனிதா.

"வாங்க சித்தி... வா சுந்தரி..."

"இதுதான் ரீனாவா? கேள்விப்பட்டோம்..."

"ஆமாங்க சித்தி... எட்டு மாசமாச்சு. யாருக்கும் சொல்லலை..."

"நீ சொல்லாட்டித் தெரியாமலா போகும்? நீ தத்தெடுத்த ரெண்டாம் நாளே, நம்ம சொந்த பந்தம் எல்லாருக்கும் தெரிஞ்சுடுச்சி... இப்பல்லாம், மொபைல் போன்லயே பறக்குது நியூஸ்!"

புன்னகைத்தபடி இருவருக்கும் குளிர்பானம் கொடுத்தாள் வனிதா.

"என் மருமக சித்ராவுக்கு நாளைக்கு வளைகாப்பு. சாயந்தரம் நாலு மணிக்கு. உன்னை அழைக்கிறதுக்காக வந்தேன். தவறாம வந்துரு... என்ன..." என்றாள் சித்தி.

"கண்டிப்பா வர்றேன் சித்தி..."

"சரி வனிதா... நாங்க கிளம்பறோம். இன்னும் நாலு வீட்டுக்குச் சொல்லணும்... "சித்தி வீட்டு வாசலில், வனிதாவின் கார் வந்து நின்றதுமே, உள்ளே எல்லாரும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து நக்கலாய் சிரித்துக் கொண்டனர்.

ரீனாவை இடுப்பில் சுமந்தபடி வனிதா நுழைந்தாள்.

"என்ன தைரியத்தில வர்றா... ஒரு அனாதைக் குழந்தையைத் தூக்கிட்டு...'

யாரோ, யாரிடமோ முணுமுணுத்தது, வனிதாவுக்கும் கேட்டது!

"வா வனிதா... உன் குழந்தையா? எப்ப பொறந்துச்சு? சொல்லவே இல்லையே!" என்று தெரியாததுபோல் கேலி தொனிக்கக் கேட்டது, ஓர் அழுகிய மனம்.

"வனிதாக்கா... உங்க வளைகாப்பு எப்ப நடந்துச்சு? எனக்கு சொல்லாம பங்ஷனை நடத்தீட்டீங்களே..." இது அடுத்தது.

"குழந்தை பிறந்தப்புறமும் அப்படியே கன்னிப் பொண்ணாட்டம், 'சிக்'ன்னு இருக்கியே வனிதா!" இது மற்றொரு திரிந்த மனம். தெரிந்தும் தன்னைத் துன்புறுத்த வேண்டும் என்பதற்காக, தெரியாதது போல் இவர்கள் வீசும் கணைகளுக்கு, புன்னகையை மட்டுமே பதிலாகத் தந்து, பெண்கள் மத்தியில் போய் அமர்ந்தாள் வனிதா.

எல்லாருக்கும் ஸ்வீட்டும் குளிர்பானமும் வழங்கிய பின், நிகழ்ச்சி ஆரம்பமானது.

"மொதல்ல நாத்தனார்ங்கிற முறையில, என் மகள் சுந்தரி வளையல் போடுவா... அப்புறம் நான். அதுக்கப்புறம் சம்பந்தியம்மா. அவங்க போட்டு முடிச்சதும் நான் கூப்பிடக் கூப்பிட மத்தவங்க, என்ன..." என்று பொதுவாகச் சொல்லிவிட்டு, "சுந்தரி! நீ ஆரம்பி..." என்றாள் சித்தி.

முக்கிய மூவரும் வளையல் அணிவித்ததும் "நீங்க வாங்க... நீங்க வாங்க..." என்று ஒவ்வொருத்தராய் அழைத்தாள் சித்தி.

ஆயிற்று, ஏறத்தாழ எல்லாருமே வளையல் அணிவித்து விட்டனர். இனி வனிதா ஒருத்தி மட்டும் தான் பாக்கி. ஆனால், வனிதாவை சித்தி ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை!

"ம்... ஆரத்தித் தட்டை ரெடி பண்ணுங்க..." என்று, நிகழ்ச்சியை முடிப்பதற்கு அறிகுறியாக சித்தி குரல் கொடுத்ததுமே, ரீனாவைத் தூக்கிக் கொண்டு அவசரமாக எழுந்தாள் வனிதா. அவள் வளையல் போடத்தான் எழுகிறாளோ என்று பயந்த சித்தி, பதைபதைப்புடன் தடுத்தாள்.

"உக்காரு வனிதா... உக்காரு... வளையல் எண்ணிக்கை சரியாப் போச்சு. இதுக்கு மேல, சாஸ்திரப்படி போடக்கூடாது!" தன் வழக்கமான புன்னகையை உதிர்த்த வனிதா, "நான் வளையல் போட எந்திரிக்கலைங்க சித்தி... அன்பளிப்பைக் குடுத்துட்டுக் கிளம்பலாம்ன்னு எந்திரிச்சேன்... வீட்ல அவசர வேலை இருக்கு..."

சித்திக்கு முகத்திலடித்தாற்போல் இருந்தது சங்கடத்துடன் நெளிந்தாள்.

வனிதா, 'விர்'ரென சித்தியின் மருமகளிடம் போய் ஐநூறு ரூபாய் கொண்ட கவரை அளித்தாள். பின் கூடியிருந்த உறவினர்களிடம், "இதான் ரீனா! எட்டு மாசத்துக்கு முன்னால தத்தெடுத்தோம். யாருக்கும் நாங்க சொல்லலைன்னாலும் எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும்ன்னு நெனைக்கிறேன்..." என்றாள் வனிதா.

உடனே, கேலிப் புன்னகையும் நக்கல் சிரிப்பும் அங்கே எழுந்தது.

"அதாவது, வயிறு அசலுக்கு மலரலே ஆனாலும் தத்தைத் தூக்கிக்கிட்டு மலர்ந்தாப் பில வளைகாப்புக்கு வந்துட்டே!" என்று ஒரு பெருசு நஞ்சை உமிழ்ந்ததும் எல்லாரும் வீடதிரச் சிரித்தனர்.

கேலிச் சிரிப்பைத் தன் புன்னகையால் அலட்சியம் செய்தபடி தொடர்ந்தாள் வனிதா...

"குழந்தையை எல்லாருக்கும் காட்டிட்டுப் போகலாம்னுதான் நான் இந்த பங்ஷனுக்கே வந்தேன். ரீனாவைத் தத்தெடுத்ததிலிருந்து, எங்களுக்கு அதிஷ்டம் கூரையைப் பிய்க்குது. அவரோட கம்பெனியில, அவரை மிகச் சிறந்த மார்க்கெட்டிங் மேனேஜர்ன்னு பாராட்டி, சம்பளத்தை நாலு பங்கு உயர்த்திட்டாங்க. எனக்கும் எதிர்பாராத பதவி உயர்வு கெடைச்சு, சம்பளம் இரட்டிப்பாயிருச்சி.

"அதுமட்டுமில்லாம, இந்த ஆபிஸ் பதவி உயர்வையெல்லாம் தாண்டின, ரொம்ப ரொம்ப பெரிய பதவி உயர்வு ஒண்ணு, எங்க ரீனாவோட அதிஷ்டத்தால எனக்குக் கிடைச்சிருக்கு... இந்த மாதிரி சுப நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தயக்கமில்லாம, தாழ்வு மனப்பான்மை இல்லாம தலைநிமிர்ந்து வந்து போகும்படியா, கடவுள் எனக்குக் கிருபை புரிஞ்சுட்டார்... எல்லாம் எங்க ரீனா வந்த வேளைதான்! இந்த வளைகாப்பு பங்ஷனுக்கு நீங்க எல்லாரும் வந்த மாதிரி, இன்னும் ஐந்து மாசத்துக்குப் பிறகு நடக்கவிருக்கும் என்னோட வளைகாப்பு பங்ஷனுக்கும் வரணும்!" அவ்வளவு தான், அந்த வீடே வெட்கத்தில் ஆழ்ந்தது.

அவசர அவசரமாக, "வனிதா வனிதா நீயும் சித்ராவுக்கு வளையல் போடு! இன்னும் எண்ணிக்கை பாக்கியிருக்கு!" என்றாள் சித்தி.

"சாரிங்க சித்தி! எனக்கு நேரமாச்சு... நான் கிளம்புறேன்..." என்று வாசலை நோக்கி நடந்தாள் வனிதா. கதவருகே சென்றவள் திரும்பி உறவினர்களிடம் புன்னகையுடன் சொன்னாள்...

"என்னோட வளைகாப்புல, எண்ணிக்கையை எல்லாம் நான் பாக்கப் போறதில்லே... வந்தவங்க எல்லாருமே எனக்கு வளையல் போடலாம் அவங்களோட வயிறு மலர்ந்திருந்தாலும் சரி, மலராட்டாலும் சரி... மனசு மலர்ந்திருந்தாப் போதும்!" ■

# குறள் இன்பம்

**திருக்குறளின் காமத்துப்பால் காட்டும், காதல் இலக்கியக் காட்சிகளின் இனிமையைப் பகிர்ந்து கொள்ளும் கட்டுரைத்தொடர்**

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

**அவர் வயின் விதும்பல்**

நூற்று இருபத்தி ஏழாம் அதிகாரத்தின் தலைப்பு, "அவர் வயின் விதும்பல்" என்பதாகும். அதன் பொருள் "காதலர் காண விரும்புதல்". கல்வியைப் பெறும் காரணத்திற்காகவோ, பொருள் ஈட்டும் நோக்கத்திற்காகவோ அல்லது இவைபோன்ற வேறேதாவது நல்ல முயற்சிகளுக்காகவோ வெளியூருக்கு சென்றுள்ள கணவனை நினைத்து வாடுகின்றாள் மனைவி. அவனுக்கும் அவளைப் பிரிந்திருக்கும் சோகம் நெஞ்சத்தில் நிறைந்திருக்கிறது. இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டும் என்ற தாகத்தால், விரைவாக அதற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இங்கிருந்து அவள் தன் தோழியிடமும் அங்கிருந்து அவன் தன் தோழனிடமும் கூறுகின்ற விடயங்களை இந்த அத்தியாயம் கொண்டுள்ளது.

**விழிகள் மங்கின, விரல்கள் தேய்ந்தன!**

அவன் பிரிந்து சென்ற நாளில் இருந்து ஒவ்வொரு நாளும் அவள் தன் வீட்டுச் சுவரிலே கோடு போட்டு வருகிறாள். அந்தக் கோடுகள் அவன் பிரிந்திருக்கும் நாட்களின் கணக்கை அவளுக்குத் தினமும் காட்டும். அதனால், அவன் திரும்பி வரும் நாள் குறைந்து கொண்டு போவது அவளுக்கு மகிழ்ச்சியை ஊட்டும். சுவரிலே தினமும் கோடுகளைப் போடுவதாலும் போட்டிருக்கும் கோடுகளைப் பல தடவைகள் எண்ணிப் பார்ப்பதாலும் அவளின் விரல்கள் தேய்கின்றன. எந்நேரமும் அவர் வருகிறாரா? வருகிறாரா? என்று வழிமேல் விழிவைத்து பார்த்துக்கொண்டிருப்பதால் அவளது கண்களும் ஒளிமங்கிப் போகின்றன. ஆனால், அவன் இன்னும் வரவேயில்லை! இந்த நிலைமையை, அவள் சோகம் கலந்த இன்பத்தோடு தன் தோழியிடம் சொல்வதாக இந்தக் குறள் அமைந்திருக்கிறது.

**"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற**
**நாளொற்றித் தேய்ந்த விரல்"** (1261)

"அவர் திரும்பி வருகிறாரா? என்று வழிபார்த்திருந்து என் கண்கள் ஒளியிழந்து போய்விட்டன. அவர் சென்ற நாள் கணக்கைச் சுவரில் எழுதி, எண்ணிப் பார்ப்பதால் என் விரல்கள் தேய்ந்து விட்டன" என்பது இதன் பொருள்

**அவரை மறந்துவிட்டால், நான் இறந்து விடுவேன்!**

ஒவ்வொரு கணமும் அவள் படுகின்ற வேதனையை உணர்ந்த தோழிக்குக் கவலையாக இருக்கிறது. அவளின் பேச்சும் சரியில்லை, செயலும் ஒழுங்கில்லை. இப்படியே விட்டால் அவளுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடிக்கலாம் என்று தோழி நினைக்கிறாள். அதனால், அவளுக்கு ஓர் அறிவுரையைச் சொல்கிறாள். "என்ன இது? உனது கணவன் உன்னோடு இங்கு இல்லை. இப்போதைக்கு அவன் வரப்போவதுமில்லை. அவன் வரும்போது வரட்டும். வந்த பின்னர். அவனோடு சண்டை போடலாம், சரசம் ஆடலாம் அல்லது முதலில் ஊடலாம் முடிவில் கூடலாம். என்னவாயினும் செய்துகொள். ஆனால், இப்போதைக்கு, கவலைப்படுவதை விட்டுவிடு. அவனைப் பற்றிய நினைப்பைத் தவிர்த்துவிடு. அவனை மறந்து இருக்கப்பார். மறந்து விட்டு மற்றைய வேலைகளைப் பார். அவன் வரும்போது வரட்டும். எங்கே போய்விடப் போகிறான்? இங்கே உன்னிடம் வந்துதானே ஆகவேண்டும்" என்று சொல்கிறாள்.

அதற்கு அவள் சொல்லும் பதிலைக் கேட்டுத், திகைத்துப் போகிறாள் தோழி. "இங்கே பார் என் தோழியே! நான் அவரை மறந்து இருந்தால் என்ன நடக்கும் என்று உனக்குத் தெரியுமா? என்னை அறியாமலே என் உள்ளம் துடிக்கும், துயரம் வெடிக்கும், பசலை நோய் என்னைப் பீடிக்கும், என் உடல் வாடிப் போகும், என் தோள்கள் மெலிந்துவிடும், என் வளையல்கள் கழன்று விழும். இவையெல்லாம் நடக்கவேண்டும் என்று நீ விரும்புகிறாயா? நீயும் உன் அறிவுரையும்! சும்மா போடி" என்று தன் தோழியையும் அவள் கூறிய அறிவுரையையும் ஏளனம் செய்கிறாள்.

**"இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்**
**கலங்கழியும் காரிகை நீத்து"** (1262)

"என் அருமைத் தோழியே! அவரை நான் இன்று மறந்தேன் என்றால், எனது அழகு என்னை விட்டுப் போய்விடும். என் தோள்களை விட்டு எனது வளையல்கள் கழன்று விடும். (அதாவது, எனது அழகு அழிந்துவிட்டால் நான் உயிரை இழந்துவிடுவேன். அவரை நினைத்துக் கொண்டிருப்பதால்தான் நான் உயிரோடு இருக்கிறேன்) என்பதை உணர்ந்து கொள்" என்பது இதன் பொருள் உயர்வுக்காக போனவர், வரவுக்காக இருக்கிறேன்!




அந்தக் காலத்தில் திண்ணைப் பள்ளிகளிலேயே கல்வியைக் கற்கும் நிலைமை இருந்தது. கற்றறிந்த ஆசிரியர் ஒருவரது வீட்டில் தங்கியிருந்து, அவருக்குப் பணிவிடைகள் செய்து கொண்டு, அவரிடமிருந்து கல்வியைக் கற்கின்ற குரு சீடக் கல்விமுறை அது. எல்லா ஊர்களிலும் அத்தகைய ஆசிரியர்கள் அல்லது குருமார் கிடைக்க மாட்டார்கள். அதனால் பல மைல்களுக்கு அப்பால் இருந்து மாணவர்கள் அத்தகைய ஆசிரியர் இருக்கும் ஊருக்குச் சென்று தங்கியிருந்து படிக்க வேண்டியிருந்தது. அவ்வாறு படிக்கும் காலம் அவரவர் படிக்கும் தரத்திற்கு ஏற்ப பல மாதங்கள், சில வருடங்கள் என்று வேறுபட்டிருந்தது.

அவ்வாறு, கல்வியில் உயர்ந்து விளங்க வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக அவளின் கணவன் உயர்கல்வியைப் பெறுவதற்காக, வேறு ஓர் ஊருக்குச் சென்றிருக்கிறான். அதனால், பிரிவுத் துன்பத்தில் இருக்கும் அவள் தோழியிடம் தன் மன நிலையை வெளிப்படுத்துகிறாள்.

"அவர் என்னுடன் சண்டையிட்டுப் பிரிந்து செல்லவில்லை. என்னை மறந்து செல்லவில்லை. என்னைத் துறந்தும் செல்லவில்லை. தனது முயற்சியால் வாழ்வின் உயர்வை விரும்பித்தான் சென்றிருக்கிறார். அதனால், அவரின் பிரிவின் துயரை நான் தாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும். அது என் கடமை. அதனால், அவர் என்னிடம் வருவார் என்ற திடமான நம்பிக்கையில் அவருக்காகக் காத்திருப்பேன். அவரின் வரவைப் பார்த்திருப்பேன்." என்று கூறுகிறாள்.

**"உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்**
**வரல்நசைஇ இன்னும் உளேன்"** (1263)

தன் முயற்சியைத் துணையாகக் கொண்டு (கல்வியை விரும்பி) என்னுடன் தங்கியிருந்து பெறும் இன்பத்தையும் தவிர்த்து, வெளியூர் சென்றிருக்கும் என் கணவர், திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன், என்பது இதன் கருத்து.

**மரமேறி வழிபார்க்கும் மனது!**

இன்றைய உலகில்கூட, தங்கள் துணைவர் எங்காவது பயணம் சென்று திரும்பி வருகின்ற வேளை வந்துவிட்டால் அல்லது வருவதற்குத் தாமதித்து விட்டால், 'எங்கு சென்றாலும் வீட்டுக்கு வருவார்தானே' என்று மனைவியோ, காதலியோ வீட்டுக்குள் முடங்கியிருப்பதில்லை. அடிக்கடி வாசலில் நின்று பார்ப்பதும் வீதிக்குச் சென்று பார்ப்பதும் பேரூந்துநிலையம், விமான நிலையங்களில் காத்திருப்பதும் சாதாரணம் அல்லவா? அவர்களின் காதல் மனம் படுத்தும் பாடுதான் அதற்குக் காரணம் அல்லவா?

இதைப் போலத் தான், பண்டைய காலத்திலும் ஒவ்வொரு கணமும் இன்பமான பதற்றத்தோடு காத்திருப்பது வழக்கம்.

வெளியூர் சென்ற கணவன் திரும்பி வரும்போது நேராக அவளிடம் ஓடிவருவான் என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும், வீட்டுக் கதவை அடிக்கடி திறந்து எட்டிப் பார்ப்பதும் வீட்டுக்கு வெளியே சென்று படலையைத் திறந்து வெளியே பார்ப்பதும் வருகின்ற வழியைப் பார்ப்பதுமாக அவள் இருக்கிறாள். சில நேரங்களில், வீட்டிலுள்ள மரத்தின் உச்சிக் கிளையில் ஏறி, அவன் வரும் வழியைக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பார்ப்பதற்கு, அவளது மனம் அவளைத் தூண்டுகிறது. அந்தக்காலத்தில் உயரமான கட்டடங்களோ, நெருக்கமான வீடுகளோ இருக்கவில்லை. அதனால் ஒரு மரத்தில் ஏறி வெகுதூரம் வரை பார்க்கக்கூடியதாக இருந்திருக்கிறது.

இத்தகைய ஒரு காட்சியை நமக்குத் தருகிறது அடுத்த குறள்.

**"கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்**
**கோடுகொடு ஏறுமென் நெஞ்சு"** (1264)

"என்னோடு சேர்ந்து காதல் இன்பத்தில் கூடியிருந்து, பிரிந்து சென்ற கணவர் அதே காதலுடன் திரும்பி வரும் நாளை எதிர்பார்த்துக்கொண்டு, என் மனம் மரத்தின் கிளைகளில் ஏறிப்பார்க்கிறது" என்பது இந்தக் குறளின் கருத்தாகும்.

(தொடரும்...)




ADVERTISEMENT

# நான்



வாழ்வின் சில சுவாரஸ்சியமான
நிகழ்வுகளைச் சந்தித்து
திரும்பும் தருணங்களில்
நான் நானாகவே இருக்க
இன்னும் முயற்சி செய்கின்றேன்

என்னோடு இன்னும்
அதிகம் பயணிக்க
இப்போதும் பெரிதும்
நம்புவது என் மௌனம்
மட்டுமே

தூரத்து சந்தோசமும்
பக்கத்து சங்கடமும்
ஒரே வண்ணம் தான்
இப்போதும் எனக்கு

வருவதும் போவதும்
காலம் தந்தது
அதில் நான் தக்க வைத்தது
காலம் சொன்னது.

✍ வி.அபிவர்ணா

---

# இறைவனே துணை



✍ அபி யது

நித்தம் உன்னை நான்
எப்பொழுதும் பார்த்து
அதிகாலை எழும் விடியல்
தருவாயா இறைவா

நான் படும் கஷ்டங்கள்
உனக்கு தெரிந்திருந்தும்
மாற்றி விட வருவாயே
மாறுவேடமாய் இறைவா

உன்னை வேண்டி நிற்கவே
மனக் கஷ்டம் எல்லாமே
காற்றில் பறக்கும் பஞ்சு போல
பறக்க வேணும் இறைவா

நான் செய்யும் காரியம்
நிறைவேற தினம்
தொழுவேனே உன்னை
நானே இறைவா.

கை எடுத்து கும்பிட்டு
வரம் வேண்டவே
வேண்டியதை கிடைக்கச்
செய்வாயே இறைவா.

எந்நாளும் நான் உன்னை
தலைவணங்க வேண்டுமே
இந்த ஒரு வரம் தான்
எனக்கு வேண்டும் இறைவா.

---

# நாயென்றால் மகிழ்



திட்டிய வீடு தன்
காவலுக்கு வளர்க்க
நாயொன்று வாங்கும்
நாட்டம் கொண்டு

செல்லம் கொஞ்சி
ஊட்டி வளர்க்கும்
வீட்டில் உள்ள மனிதரை
தள்ளி வைத்து விட்டு

ஆச்சரியம் தான்
அழகாக பேணி
ஆதரவாக இருக்கும்
நீ பசி கிடந்திட

நாயென்று உன்னை
இழிவாக திட்டிய
வீட்டில் உண்டால்
நன்றியோடு இரு

ஏன் தெரியுமா?
நீ அந்த வீட்டை
மதித்து நடந்து
அருகில் இருந்தால்

ஏறி மிதித்து
ஏளனம் செய்து
வசை படிப்பார்
நிலை மாறிப்போகும்

நாய் போல
நன்றிக்கு ஒரு
உயிர் வருமா
இந்த பூவுலகில்?

நாயென்று இழிவாக
பேசல் விடுத்து
உயிரென்று அதனை
மதிப்போம் நாம்.

✍ நதுநசி

---

# நொருங்குண்ட கண்ணாடி



ஒரு நாளில் ஒரு தடவையேனும்
முன்னிற்பேன்
நிலைக் கண்ணாடியுடன்
மௌனமொழியில் உரையாடியபடி

சிரித்தால் சிரிக்கும்
முறைத்தால் முறைக்கும்
உள்ளதைக் காட்டும்
உண்மையைக் கூறும்

ஒருமுறை
நொருங்குண்ட என் இதயம்
துணை தேடிச் சென்றது
கண்ணாடி முன்
விம்மினேன் அழுதேன்
ஓவெனக் கதறினேன்
பதிலுக்கு விம்மியது

அழுதது
ஓவெனக் கதறவில்லை
ஏன் கதறவில்லை?
ஏனோ இரு கரங்கள்
நொருக்கியது
நிலைக் கண்ணாடியை

✍ சி.அபினுஷா

---

# காதல் மண்வளம்

உழவனே உயர்ந்தவன்
நஞ்சை எல்லாம்
புஞ்சை ஆகும்

விவசாயி கால்பட்டால்
மண்ணும்
பொன் ஆகும்
விளைவது பயிராகும்

விலையில்லாத நெல் மணி
அழகாகும்



வளைந்து நிற்கும் செங்கதிர்
உழைப்பாகும்

வறட்சி வந்தால் வாடுவது
மண்ணாகும்
பட்டினியால் வாடுவது பல
நாடாகும்

மழையின் தேவை
அதிகமாகும்
மண் வாசனை
மிக மனமாகும்

✍ தாரா

---

# கொற்றவை உதயமாகிறாள்

பூவும் புயலானால்
சிக்குண்டு மாலையாகுமா?
பெண்மையும் கொற்றவையானால்
ஆண்மை திமிருமா?

நிலவாக இருளில்
நித்தம் கரையாதே



கதிரவனாக எழுந்திடு
காமுகனை எரித்திடு

சிற்றோடை நீராகச்
சிறையில் அடங்காதே
சீறும் வெள்ளமாகச்

சீரழித்தவனை சிதைத்திடு

கழுகுக்கு இரையாகும்
கெண்டை மீனாகாது
புலியாகக் கிளம்பிடு
பழிப்போரை பலிதீர்த்திடு.

✍ அ.பாக்யராஜ்

---

# பெண்ணே, கண்ணே



✍ லக்க்ஷியா

“ உன்னத பெண்ணே!
உலகின் கண்ணே!

உன் வளர்ச்சியில்
நெருங்கட்டும் விண்ணே!
உன் முயற்சியில்
செழிக்கட்டும் இம்மண்ணே!

நினைத்து விட்டால்
என்றைக்குமே நீ முன்னே
அனைத்து நலங்களும்
வளங்களும் வந்திடும்

உன் பின்னே

தொடர்ந்து உயர்ந்திடு
கண்ணே
இன்ப வருங்காலம் என்றும்
உனதென்று பொண்ணே.

# இரு மலர்கள்

யாழ் சத்யா

**அருண்யா மாறியது ஏன்?**

கவின்யா சொல்லியிருந்த மாதிரியே வைத்தியர் விடுதிக்கு மதியம் ஒரு மணிக்கு சென்றவன் வரவேற்பறையில் காத்திருக்கத் தொடங்கினான். சிந்தனை முழுவதும் அருணிக்கு என்னவாகியிருக்கும் என்பதிலேயே சுற்றிச் சுழன்றது.

"சொரி ஸாம்... ஒரு எமெஜெர்ன்ஸி கேஸ்... கொஞ்சம் லேட் ஆகிட்டு..."

"பரவாயில்லை கவி... நான் இப்ப கொஞ்சம் முதல்தான் வந்தன்" தண்ணீரை எடுத்து அருந்தி விட்டு ஸாமின் முன்னால் வந்து அமர்ந்தவள்,

"எப்பிடித் தொடங்கிற என்றே தெரியல ஸாம்... அருணை சீரழிச்சிட்டாங்க ஸாம்... ஏழெட்டுப் பேர் சேர்ந்து ரேப் பண்ணிட்டாங்க... அவ வாழ்க்கையையே நாசமாக் கிட்டாங்க." உச்சகட்ட வேதனைக் குரலிலே தொனிக்க விம்மிய இதயமும் அழுத கண்களுமாய் கவின்யா பட்டெனப் போட்டு உடைக்கவும் அதிர்ந்து போய் எழுந்தே விட்டான் ஸாம். நம்ப முடியாதவனாய் கவியையே பார்த்தவன், தான் கேட்டது நிஜம் தானா? என நம்ப முடியாமல் கத்தினான்.




"நோ... அப்பிடி இருக்காது... என்ர அருணுக்கு ஒண்டுமில்லை..."

"அப்பிடி இருந்திடக் கூடாதா? என்றுதான் என்ர மனசும் ஏங்குது... ஆனால், அப்பிடி நடந்திட்டுதே... என்ர வாழ்க்கையைத்தேடிப் போய்த் தன்ர வாழ்க்கையைத் துலைச்சிட்டு வந்து நிக்கிறாளே பாவி. கடைசில பார்த்தால் ரெண்டு பேரும் வாழ்க்கையை இழந்து நிக்கிறமே."

"கவி... என்ன கவி சொல்லுறீர்? எப்பிடியாச்சு? யார் அந்த ராஸ்கல்ஸ்? ஐயோ... நான் எதுக்காக இப்பிடி தொடர்பே இல்லாம இருந்தன் என்று என்னிலேயே கோபமாகக் கிடக்கு... இவ்வளவு வருஷமா இத்தனை விசயம் நடந்திருக்கு... எதுவுமே தெரியாமல் இருந்திட்டனே கவி... அருணுக்கு எப்பிடி ஆச்சு?"

"ரிலாக்ஸ் ஸாம்... நடந்து முடிஞ்சதை மாத்த முடியாதே... போன பிறப்பில நிறைய பாவம் செய்திருப்பம்போல, அதுதான் எல்லாரும் இப்பிடி அனுபவிக்கிறம்... அது பெரிய கதை ஸாம்"

"சொல்லும் கவி... முழுசா என்ன நடந்தது என்று சொல்லும்... ப்ளீஸ்"

உடைந்து போய் கேட்டவனை உருக்கமாகப் பார்த்தவள் நீண்ட பெருமூச்சோடு சொல்லத் தொடங்கினாள்.

"யாதவ் காணாமல் போய் நானும் அப்பாவும் இங்க வந்திட்டம், அருணும் அம்மாவும் கொழும்பில இருந்தாங்க... அப்பதான் ஒருநாள் யாதவிட சிங்கள ப்ரண்ட் ஒராள் அருணிய கொழும்பில மீட் பண்ணிச் சொல்லியிருக்கிறார். யாதவ் முல்லைத்தீவில தப்பிப்போய் நிற்பதாகவும் வீட்டுக்குப் போக முடியாது என்பதால கடல் வழியா ராமேஸ்வரம் போக ட்ரை பண்ணிட்டு இருக்கிறதாகவும் எங்கள் எல்லோரிட போனும் கண்காணிப்பில இருக்கிறதால யாருக்கும் போன் பண்ணேல என்றும் தன்னைப் பற்றிக் கவலைப்படாமலும் இருக்கச் சொல்லி."

அந்தச் செய்தி உண்மையா? பொய்யா? என்று கூடச் சரியாகத் தெரியாது. இதைக் கேள்விப் பட்ட உடனே தன்ர அசட்டுத் துணிச்சலோட யாதவ தேடி முல்லைத்தீவுக்கு போய்ட்டா. அம்மாவுக்கு கம்பஸால கண்டி ட்ரிப் போறதா சொல்லியிருக்கா.

இவள் முல்லைத்தீவு போன அண்டைக்கே ஏ9 பாதை (வடபகுதியை மற்றைய பகுதிகளோடு இணைக்கும் நெடுஞ்சாலை) பூட்டிட்டாங்க. திடீரெனதானே எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் பாதை பூட்டினாங்கள். இவள் அங்க மாட்டிட்டா... அங்க இருந்து ஒரு தடவை எனக்கு போன் பண்ணி விசயத்தை சொன்னா. நாங்க எல்லாரும் பதறிப்போய் என்ன செய்யிற என்று தெரியாமல் தவிச்சுப் போனம்...

அம்மா கொழும்பில... அருண் வன்னில நானும் அப்பாவும் இங்க, குடும்பமே சிதறிப் போச்சு...

ஆரம்பத்தில கொஞ்சக்காலம் தொடர்பில இருந்தா. ஒரு குடும்பத்தோட தங்கியிருக்கிறதாகவும் அவங்க நல்லா பார்த்துக் கொள்ளுறதாகவும் எங்களைக் கவலைப்படாமலும் இருக்க சொன்ன...

எனக்கு மட்டும் ரகசியமாகதான் இன்னும் யாதவ தேடிட்டு இருக்கிறதாகவும் எப்பிடியும் கண்டு பிடிச்சிடுவன் என்று சொன்னா... எனக்கு அவளை என்ன சொல்லித் திட்டுற என்றுகூடத் தெரியேல்ல...

பத்திரமா இருன்னு சொல்லிப் போனை வைச்சிட்டன். அம்மா அப்புறமாக பிளைட் ஓடத் தொடங்கினதும் இங்க வந்திட்டா...

கடைசிச் சண்டை ரொம்ப உக்கிரம் அடைஞ்சு எல்லாரும் இடம் பெயர்ந்த நேரம் கடைசியாக முள்ளி வாய்க்காலில நிக்கிறன் என்று அவள் சொன்னதுதான் எங்களுக்கு கடைசியாக அவளைப் பற்றிக் கிடைச்ச தகவல்.

அதுக்குப் பிறகு ரெண்டு, மூணு மாதமா எந்தத் தொடர்பும் இல்லை. நாங்கள் இங்க உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு ஒவ்வொரு நாளும் நியூஸ் பார்த்துக் கேட்டுக் கொண்டே காலத்தை ஓட்டிட்டு இருந்தம்.

மே 18, 2009 திடீரென போராட்டத்தின் ஆணி வேரையே அறுத்து எறிஞ்சாச்சு... யுத்தம் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டுச்சு... எங்களுக்கோ எதை நினைச்சுக் கவலைப் படுற என்று தெரியேல்ல...

முள்ளிவாய்க்காலில் இருந்து மக்கள் எல்லோரும் வவுனியா செட்டிக்குளத்திற்கு கொண்டு வரப்பட்டு முகாம் அமைத்து தங்க வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைச்சுது.

அப்பா பிளைட்ல ரெண்டு நாளிலேயே கொழும்பு போய் வவுனியா போய்ட்டார். ஆனால், முகாமுக்குச் சென்று யாரையும் பார்க்க விடேல்ல, எந்தச் செய்தியும் கிடைக்காம தவிச்சிட்டு இருந்தப்பதான் இந்தியாவில இருந்து போன் வந்திச்சு.

அருண்யா சந்திரஹாசன் நலமாக வலயம் நாலில் இருக்கிறதாகத் தகவல் தெரிவிக்கச் சொன்னதாக ஹிந்து பேப்பரில் போட்டிருப்பதாக யாரோ புண்ணியவான் சொல்லவும்தான் எங்களுக்கு உயிரே வந்திச்சு. அதைத் தொடர்ந்து பத்துப் பதினைந்து பேர் ஹோல் பண்ணிச்சினம். எங்கட இழப்பை தங்கடயா எண்ணிப் பரிதவிச்ச அந்த தமிழ்நாட்டுச் சனங்களையும் இப்பிடி ஹோல் பண்ணி பேருதவி செய்த அந்தச் சொந்தங்களையும் என்றைக்குமே மறக்கேலாது.

முகாம் நிலைமையை பார்க்கப் போனத ஹிந்து ரிப்போர்ட்டர் ஒராளைப் பிடிச்சு வீட்டு நம்பர் குடுத்து இவள் தகவல் சொல்லி விட்டிருக்கிறா? அந்தாளும் தனக்கென்ன வந்திச்சு என்று போகாமல் அதை அந்த நியூஸ் பேப்பரில போட உடன அதைப் பார்த்த கொஞ்சச் சனம் எங்களுக்குத் தகவல் தெரிவிச்சிட்டுதுகள். அந்த ரிப்போர்ட்டரும் எங்களுக்குத் தகவல் தெரிவித்தார்.

அதுக்குப் பிறகு அப்பா வலயம் நாலில போய் அருணிய பார்த்தும் விட்டார். நல்லா மெலிஞ்சு கறுத்து, தலைமுடி வளர்ந்து எண்ணை தண்ணி இல்லாம பரட்டை பத்திப் போய் இருந்தாளாம்.

முள்ளுக்கம்பி வேலிக்கால டெய்லி போய் அப்பா பார்த்திட்டு வந்து எங்களுக்குச் சொல்லுவார். அம்மா தானும் அவளைப் பார்த்தே ஆகணும் என்று சொல்ல நானும் அம்மாவும் பிளைட்டால கொழும்பு போய் அங்கிருந்து ரெயினில வவுனியா போய் தெரிஞ்சவங்க வீடொன்றில தங்கினம். **(மலரும்....)**

# நெல்லியடியில் IELTS வகுப்புகள்




CALL - 077 168 68 95

# போர்க்குற்ற விசாரணை.....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

பேராயர் என்ற அந்தஸ்த்தில் இருந்து கொண்டும் வத்திக்கான் திருத்தந்தையின் கர்த்தினால்களில் ஒருவர் என்ற சர்வதேச அங்கீகாரத்தோடும் பௌத்த சமயத்தை மையப்படுத்தித் தன் சிங்கள இனம் சார்ந்து மாத்திரம் மல்கம் ரஞ்சித் நியாயம் கோரியிருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 269 பேரில் அதிகமானோர் தமிழர்கள். ஆகவே, பாதுகாப்பற்ற தமிழ்ச் சமூகம் மீதுதான் தாக்குதல் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைக்கூட மல்கம் ரஞ்சித் புரிந்து கொண்டவராக இல்லை.

மாறாக தேவாலயங்கள் இலக்கு வைக்கப்பட்டமை என்பது மாத்திரமே மல்கம் ரஞ்சித்தின் கவனமாக இருந்தது. இதனை அவர் வழங்கிய நேர்காணல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

1982 இல் அருட்தந்தை சிங்கராயர் கைது செய்யப்பட்டதிலிருந்து 2009 போர் இல்லாதொழிக்கப்படும் வரை ஒன்பது அருட்தந்தையர்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

மேலும் சில அருட்தந்தையர்கள் காயமடைந்துள்ளனர், பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர், வேறு சிலர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்குக் கிழக்கில் நூற்றுக்கும் அதிகமான தேவாலயங்கள் குண்டுத் தாக்குதலினால் முற்றாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் சில தேவாலயங்கள் இன்றும் முடங்கியுள்ளன.

முப்பது வருடப்போரின் அவலங்கள் இழப்புகளுக்கு மத்தியில் வடக்குக் கிழக்குத் தமிழ் ஆயர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் பொறுப்புடன் செயற்பட்டனர். 2009 இன் பின்னரே வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டது. அது தமிழ் ஆயர் மன்றம் என்று வெளிப்படையாகக் கூறப்படுவதுமில்லை.

இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் கூட்டுப் பொறுப்பு மற்றும் சமய ஒற்றுமை என்ற பண்பின் அடிப்படையில் வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம் இயங்குகின்றது.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உருவெடுத்து 2018 பெப்ரவரியில் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவாக மாற்றம் பெற்ற ராஜபக்ஷ குடும்பத்திற்குக் குடைபிடிக்கும் அரசியலையே மல்கம் ரஞ்சித் முன்னெடுத்திருந்தார். ஆகவே, ராஜபக்ஷ குடும்பத்தை ஆதரித்தமைக்காக சனல் 4 ஆவணப் படத்தின் பின்னர் பேராயர் பாவ மன்னிப்புக் கேட்டிருக்கலாம்.

ஆனாலும் கத்தோலிக்கர்கள் அல்லாத பௌத்த சிங்கள மக்களுக்காக குரல் கொடுத்தமைபோன்று, தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கான பேராயராகக்கூட மல்கம் ரஞ்சித் செயற்படவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழர்கள் கோருகின்ற இன அழிப்பு விசாரணை அல்லது குறைந்தபட்சம் ஜெனீவா மனித உரிமைச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேசப் போர்க்குற்ற விசாரணைக்கு மல்கம் ரஞ்சித், ஆயர் இராயப்பு ஜோசப்புடன் இணைந்து அப்போது கடும் அழுத்தம் கொடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்திருக்காது.

**நன்றிக் கூர்மை**

# பெண் அடிமைத்தனமும்...

(12 பக்கத் தொடர்ச்சி...)

பெண் கல்வியின் முக்கியத்துவம் ஒரு சமூகத்தில் ஆண்கள் கல்வி கற்பதற்கு எத்தகைய வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவோ அவற்றுக்கு நிகராக பெண்களுக்கும் கல்வி கற்பதற்குரிய அனைத்து வாய்ப்புக்களும் எதுவித பாரபட்சங்களுமின்றி வழங்கப்பட வேண்டும். இதனை பெண்கள் எதுவித தடையுமின்றி பெறும் நிலையே கல்வியின் சமத்துவம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. ஒரு சமூக அமைப்பிலே பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை வசதிகளையும் சமூக அந்தஸ்தையுமுடைய பல பெண்கள் வாழ்கின்றார்கள். அதே வேளையில் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காகப் பாடுபடும் பெண்களும் சமூகத்தில் வாழ்கின்றார்கள். இவர்களில் சிலர் எவ்விதமான கல்வியறிவும் அற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் கல்வியறிவு பெறும்போது குடும்பத்தின் சுகாதாரம், பாதுகாப்பு போன்றவைகள் ஓரளவு உறுதிப்படுத்தப்படுகின் றன. கல்வி அறிவு பெற்ற பெண்களின் சமூகப் பங்களிப்பு சமூக வளர்ச்சிக்கு ஓர் காரணியாகவும் அமைகின்றது. கல்வி அறிவு பெற்ற பெண் மனித வளத்தின் நேரிடையான பங்களிப்பு குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நன்மை விளைவிக்கும்.

பெண் மனித வளத்தை விருத்தி செய்ய வேண்டுமானால் பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும். அண்மைக் காலங்களில் பெண்கள் பல துறைகளிலும் சம உரிமையுடன் கல்வி கற்று வருகின்றனர். இதனை சமூகம், அறிவு ரீதியாக உணர்ந்து செயற்படத் தொடங்கியுள்ளது. இன்றைய சமூகத்தின் அதிதீவிரமான அறிவுத்தேடல், பொருள் நோக்கிய சிந்தனை போன்றவைகளின் காரணமாக ஆண், பெண், சிறுவர்கள் என்ற பேதமின்றி யாவரும் கற்பதற்கும் உழைப்பதற்கும் உரியவர்கள் என்ற சிந்தனை மேலோங்கி வருகின்றது. குடும்பத்தின் வளர்ச்சியிலும் கல்வியிலும் அதிக கவனம் கொண்டவர்களாக கூடிய பொறுப்புணர்ச்சியுடன் பெண்கள் செயற்படுகின்றனர். தொழில் புரியும் பெண்கள் தொடர்பான தவறான எண்ணங்கள், சிந்தனைகள் மாற்றப்பட்டு வருகின்ற போதிலும் சில சமூகங்களில் இத்தகைய முன்னேற்றகரமான சிந்தனைகள் சரியாக அங்கீகரிக்கப்பட முடியாத நிலையும் உண்டு.

அந்த வகையில் பெண் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் அதன் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார, வளர்ச்சி போன்றவைகள் தொடர்பான சமூக ஆதரவைத் திரட்டும் நோக்குடன் கல்வி நிறுவனங்களும் அரசாங்கங்களும் செயற்பட வேண்டும். கிராமிய மக்களிடையே பெண் பிள்ளைகளின் கல்வி நிலை தொடர்பான பெற்றோர் அக்கறையின்மையை நீக்கும்போது பெண்களின் கல்வி நிலை உயர்வடையும்.

பெண்களுக்கும் கல்விக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதற்காக பெண் கல்வியைத் துரிதப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் செயற்பட வேண்டும்.

பெண்களை கல்வியில் மாத்திரமின்றி பல துறைகளிலும் அவர்களை அடிமைப்படுத்தாமல் அவர்களுக்கான சம உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றை வழங்கி அவர்களையும் மதித்து போற்ற வேண்டும். ■

# சனல் – 4 தமிழ் மக்களுக்கும்...

(08 பக்கத் தொடர்ச்சி...)

அதனால் நட்புமற்ற, பகையுமற்ற அரசியல் அணுகுமுறையினையே அது பின்பற்றும். இதனால்தான் "குவாட்" அமைப்பில் பங்குவகிக்கின்ற அதே வேளை "பிரிக்ஸ்" அமைப்பிலும் பங்காளியாகின்றது. சீனாவின் மேலாதிக்கத்தை சமநிலைப்படுத்த குவாட் அமைப்பு தேவை. அதேவேளை பொருளாதார நலன்களுக்கும் சர்வதேச பூகோள நலன்களுக்கும் பிரிக்ஸ் அமைப்பு அதற்கு தேவை.

உக்ரைன் போரினால் மேற்குலக பொருளாதாரம் பலவீனப்பட்டது. மாறாக இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி கண்டது. ரஷ்யாவிடம் குறைந்த விலையில் எரிபொருட்களை வாங்கக்கூடிய விலையில் சர்வதேச சந்தைகளில் விற்கவெல்லாம் அதனால் முடிந்தது. இந்தியாவில் மேற்குலக நலன்கள் நிரம்பிக் கிடப்பதால் இந்தியா மீது நெருக்கடிகள் எவற்றையும் அவை கொடுக்கப்போவதில்லை.

தமிழ்த்தரப்பு இந்தப்புதிய சூழலை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்குச் சாதகமான வெளிகள் இச்சூழலில் இருக்கின்றன. அவற்றை முதலில் அடையாளம் காண வேண்டும். பின்னர் தகுந்த மூலோபாய, தந்திரோபாயத் திட்டங்களுடன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கைத்தீவை மையமாகக் கொண்ட புவிசார் அரசியல் ஒரு சாதகமான வெளி. ஜெனிவா, கோவையை மூடாது என்பது சாதகமான வெளி. பொருளாதார நெருக்கடி சாதகமான வெளி. அதேபோல பெருந்தேசிய வாதமும் சாதகமான வெளிதான். இந்த வெளிகளை ஒருங்கிணைத்து எவ்வாறு முன்னேறுவது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இங்கேயுள்ள பிரதான பிரச்சினை யார் முன்னெடுப்பது என்பது? இன்று இதனை முன்னெடுக்கும் ஆற்றல் தனித்தரப்புகளிடமில்லை. எனவே, உடனடியாக ஒருங்கிணைந்த அமைப்பு ஒன்றை கட்டியெழுப்ப வேண்டும். அதனூடாக விவகாரங்களை கையாள முயல வேண்டும். தனித்தனியான அணுகுமுறைகளை சர்வதேச அரசியல் கணக்கெடுப்பதில்லை. பேரம் பேசும் பலத்தையும் தனித்த செயற்பாடுகளினால் உருவாக்க முடியாது. தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை பலவீனப்படுத்துவதற்காக சர்வதேச தரப்புகள் ஒருங்கிணைவு அரசியலை விரும்பமாட்டாது. எனினும் நாம் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

இந்தியக்குறுக்கீடு, சிங்களத்தை தாஜா பண்ண வேண்டிய நிலையில் வல்லரசுகள் இருத்தல், அரசுகளுக்கிடையேயான உறவுகள் என்பன பாதகமான நிலைதான். சாதகமான வெளிகளைக் கொண்டு பாதகமான நிலைகளுக்கு முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

சனல் - 4 எழுப்பியுள்ள புதிய அலை தமிழ்த் தரப்பிற்கு மேலும் சாதகமான வெளிகளைத் திறந்து விடலாம். இங்கே ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்தும் திட்டம் இருப்பது போலத் தெரிகிறது. ராஜபக்ஷாக்களை கட்டுப்படுத்துதல், சீன மேலாதிக்கத்தைக் கட்டுப்படுத்துதல், பெருந்தேசியவாதத்தைக் கட்டுப்படுத்தல் என்கின்ற மூன்று முக்கிய மாங்காய்கள் முக்கிய இலக்காக இருப்பது போலத் தெரிகிறது. ராஜபக்ஷாக்கள் பெருந்தேசியவாதத்திற்கும் சீன அரணுக்குள்ளும் பாதுகாப்புத் தேடுவதை மேற்குலகம் அனுமதிக்கப் போவதில்லை.

தற்போது தென்னிலங்கை சனல் - 4 விவகாரம் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கும் பச்சைக் கொடி காட்டியுள்ளது. இது தமிழ் மக்களுக்குச் சாதகமான விடயம். போர்க்குற்ற விவகாரம் சர்வதேச விசாரணைக்குச் செல்வதையும் இது சாத்தியபடுத்தப் பார்க்கும். ராஜபக்ஷாக்கள், பெரும்தேசியவாதம், சீன மேலாதிக்கம் இம் மூன்று பெரும் தூண்களைக் கட்டுப்படுத்தப்படாமல் "இந்தோ-பசுபிக் மூலோபாயத்திட்டம்" ஒரு அடிகூட நகர முடியாது.

இன்னும் என்னென்ன அதிசயங்கள் நிகழப்போகின்றதோ! ■

# கிளிநொச்சியின்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படியென்றால் எதிர்காலத்தில் அப்படியான அடையாளத்துடன் கூடிய கட்டடக் கலையோடு ஒரு மண்டபத்தை அல்லது பணிமனைத் தொகுதியை அமைப்பதாக இருந்தாற் கூட, அதை எங்கே அமைக்க முடியும்? அதன் வடிவமைப்பை எப்படி முழுமைப்படுத்திக் காட்சிப் படுத்துவது?

**கிளிநொச்சி மாநகர சபையாக அடுத்த 10, 15 ஆண்டுகளில் வளர்ச்சியடையும்போது அதன் பரிமாணங்களை எப்படி வெளிப்படுத்துவது?**

மாவட்டச் செயலகமும் அதனுடைய திட்டமிடல் அதிகாரிகளும் தினமும் அந்த வழியால் சென்று வருகிறார்கள்தான். அவர்கள் மட்டுமல்ல ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர்கள், இணைப்பாளர்கள் தொடக்கம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வரை பொறுப்பானவர்கள் இந்த வழியால் செல்கிறார்கள்தான். அதைவிட நகர அபிவிருத்திச் சபை, உள்ளூராட்சி மன்றம், மாகாண உள்ளூராட்சி அமைப்பினர் எனப் பல தரப்பினருக்கும் இதெல்லாம் தெரியும். இது தவறென்றும் புரியும்.

அப்படித் தெரிந்து கொண்டே எல்லோரும் அமைதியாக இருக்கிறார்கள். இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு இன்னும் கூடுதல் பொறுப்புண்டு. அவருடைய தலைமைத்துவத்தின் கீழ்தான் கிளிநொச்சியின் பிரதேச சபைகள் இயங்கின. நிச்சயமாக அவர் இதைக்குறித்துச் சரியாகத் தீர்மானித்திருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கக் கூடிய ஒன்றைப் பற்றி இவர்களில் யாரும் கவலைப்படவில்லை. உள்ளூரச் சிலர் கவலைப்பட்டாலும் அதை வெளிக்காட்டாமல் கள்ளத்தனமாக இருந்து விடுகிறார்கள். இவர்கள் தங்களுடைய மனச்சாட்சிக்கும் அறிவுக்கும் துரோகமிழைக்கிறார்கள்.

எதிர்காலக் கிளிநொச்சி என்பது ஒழுங்கானதாக, அழகம்சம் பொருந்தியதாக, முற்போக்கானதாக, சிறப்பானதாக, சரியானதாக, நேர்த்தியானதாக இருக்க வேண்டும். முக்கியமாக வெளிப்படைத்தன்மை நிறைந்ததாக.

**ஆனால், அதற்கு மாறாக - எதிர்மறையாக அல்லவா சம்பவங்கள் நடக்கின்றன?**

இந்த இடத்தில் கிளிநொச்சியின் வளர்ச்சி, கிளிநொச்சியின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்போர், எதிர்காலத்திலாவது சரியாகத் தீர்மானம் எடுக்கக் கூடியவர்களாக மாற வேண்டும். அல்லது அப்படித் தீர்மானம் எடுக்கக் கூடியவர்களை மக்கள் அதிகாரத்துக்குக் கொண்டு வரவேண்டும். "மடையர்களை" விலக்கி, புத்திசாலித்தனமானவர்களை மக்கள் அங்கீகரிக்க வேண்டும்.

இதேவேளை இங்கே இன்னொரு கேள்வியையும் நாம் எழுப்பலாம்.

கரைச்சிப் பிரதேச சபை உள்ளடங்கலாக கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளும் செய்த மகத்தான திட்டங்கள், வரலாற்று சாதனைகள், மக்கள் பயனுறு வேலைகள் என்ன என யாராவது பட்டியலிட முடியுமா? குறைந்தபட்சம் தங்களுடைய மனச்சாட்சியின் முன்னிறுத்திக் கணக்குப் பார்க்க - மதிப்பிட வேண்டும்.

அதற்குமுன் இந்தத் தரப்புக்கு ஆதரவளித்தோரும் தொடர்ந்து ஆதரவளிப்போரும் பொறுப்புச் சொல்வது அவசியம். ஏனென்றால் இதொன்றும் அரசாங்கம் திணிக்கும் திட்டங்களோ நடவடிக்கைகளோ அல்ல. எமது பிரதேசத்தின் பிரதிநிதிகள், அதிகாரிகளின் அப்பட்டமான தவறுகளின் கூட்டு விளைவாகும்.

இவர்கள் இதற்கெல்லாம் பொறுப்பெடுக்க மாட்டார்கள் என்பது தெரியும். ஆகவே, மக்கள் தான் இது குறித்துத் தெளிவடைய வேண்டும். ஏனென்றால் இந்த அதிகாரிகளிடத்திலும் ஒத்தோடிகளிடத்திலும் இந்தப் பிரதிநிதிகளிடத்திலும் உள்ளத்தில் அதற்கான ஒளி இல்லை. அவர்கள் இதைப் படித்தாலும் படிக்காததைப் போலவே இருப்பார்கள்.

இந்தப் போக்கினால்தான் கிளிநொச்சி அழிகிறது. ஆற்றலுள்ளவர்கள் இதிலிருந்து மீண்டெழ வேண்டும். நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே. நாமார்க்கும் குடியல்லாம். நமனையும் அஞ்சோம் என்றெழ வேண்டும். ■

# புதைகுழி சொல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் புதைகுழி அகழ்வுப் பணிகள் நடைபெறுகின்றன. தொல்பொருள் துறை சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தொல்லியல் பேராசிரியர் ப.புஷ்பரத்தினம், சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், ரனித்தா, ஞானராசா, தடயவியல் பொலிஸார் ஆகியோர் பிரசன்னமாகி உள்ளனர். அகழ்வுப் பணிகள் இடம்பெறுகின்றன. காணாமலாக்கப்பட்டோர் ஒர் சங்கத்தின் சார்பில் இரண்டு சட்டத்தரணிகள் அகழ்வாய்வைப் பார்வையிடுகின்றனர்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, நேற்றையதினம் ஒரு உடற்பாகம் முழுமையாகவும் இன்னொரு உடற்பாகம் பகுதியளவில் மீட் கப்பட்டதாகவும் ஏற்கெனவே மீட்கப்பட்ட ஐந்து உடற்பாகங்களுடன் ஆறு உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த பகுதியில் துப்பாக்கி சன்னம் ஒன்றும், கழிவு நீரை சுத்திகரிக்கும் உபகரணம் ஒன்றும் தடயப்பொருட்களாக எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் அகழ்வுப் பணியில் சடலங்களை அடையாளப்படுத்துவதில் கடினத்தன்மை காணப்படுவதாகவும் ஒன்றன் மேல் ஒன்றாக பல உடல்கள் பின்னிப்பிணைந்து இருப்பதாலும் இந்தநிலை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வின்போது சேகரிக்கப்படும் உடற்பாகங்கள் மற்றும் சான்று பொருட்கள் என்பன நீதிமன்ற பதிவேட்டின் பதிவு மற்றும் பொலிஸ் பதிவு, மருத்துவமனைப் பதிவுக்கு உட்படுத்தப்பட்டு அனைத்துப் பொருட்களும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அகழ்வுப் பணிகள் நிறைவில் உடற்பாகங்கள் மற்றும் சான்று பொருட்கள் மேலதிக பகுப்பாய்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதைகுழியில் உள்ள எலும்புக் கூடுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளதால் அகழ்வு செய்வதற்கு அதிக நேரம் செலவாகிறது.

இலங்கையில் சுமார் 20 இற்கு மேற்பட்ட 'மனிதப் புதைகுழிகள்' அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஜே.டீ.எஸ், எப்.ஓ.டீ, சி.எச்.ஆர்.டி மற்றும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் ஆகிய நான்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த புதை குழிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்கள், தனது கடமையை சரிவர முன்னெடுக்கவில்லை என தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும் தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளது. குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்கு போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை. யாரேனும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டிருந்த ஒரு சில அரிதான வழக்குகளிலும் அந்தக் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது." என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானோரின் சடலங்களைக் கொண்ட பாரிய மனிதப் புதைகுழிகள் ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டாலும் நூற்றுக்கணக்கிலாவது இலங்கையில் காணப்படுகின்றது என அந்த அறிக்கையில் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பகுதியில் மட்டும் துரையப்பா விளையாட்டு அரங்கம், செம்மணி மனிதப் புதைகுழி, மிருசுவில் மனிதப் புதைகுழி என மூன்று மனிதப் புதைகுழி இடங்கள் காணப்படுகின்றன.

அதேபோல் கணேசபுரம் மனிதப் புதைக்குழி (கிளிநொச்சி), புதுக்குடியிருப்பு மனிதப் புதைகுழி (முல்லைத்தீவு), திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி (மன்னார்) உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் இருக்கின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகள் தவிர, குருநாகல், கம்பஹா, கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய இடங்களிலும் இந்த மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்துவதற்காக அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினால் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மனிதப் புதைகுழிகள் அகழப்பட்ட போதிலும், அந்த அகழ்வுகளின் ஊடாக இந்த புதைகுழிகளுக்கு காரணமானவர்கள் எவரும் நீதிக்கு முன் நிறுத்தப்படவில்லை என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தினத் தாக்குதல் குற்றவாளிகள் தப்ப முடியாது என ஜனாதிபதி ரணில் சூளுரைத்துள்ளார். புதைகுழி விவகாரம் தொடர்பாக அறிய அரிய மக்கள் காத்திருக்கிறார்கள். ■

# நியூஸிலாந்தைப் புரட்டிய பென் ஸ்டோக்ஸ்




2023 உலகக் கிண்ணப் போட்டி தொடங்க இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், 32 வயதாகும் பென் ஸ்டோக்ஸ் ஒரு நாள் போட்டிக்குத் திரும்ப வேண்டும் ரசிகர்கள் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது, இதை ஏற்றுக்கொண்டு, ஓய்வு முடிவை திரும்பப் பெற்றதுடன் தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் நியூஸிலாந்துக்கு எதிரான தொடரில் மூன்றாவது ஒரு நாள் போட்டியில் மீண்டும் களமிறங்கினார். லண்டன் கென்னிங்டன் ஓவலில் நடைபெற்ற போட்டியில் 2017க்குப் பிறகு சதமடித்தார் ஸ்டோக்ஸ்.

76 பந்துகளில் சதமடித்த அவர் சக வீரர் டேவிட் மாலனுடன் இணைந்து 201 ஓட்டங்கள் எடுத்தார். இது இங்கிலாந்து அணியின் அதிகபட்ச இணைப்பாட்டமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக இயன் மோர்கன் - ஜோ ரூட் இணைந்து 2015இல் நியூஸிலாந்துக்கு எதிராக நாட்டிங் காமில் அடித்த 198 ஓட்டங்களே அந்த அணியின் அதிகபட்ச இணைப்பாட்டமாக இருந்தது.

தற்போது அதை ஸ்டோக்ஸ் - மாலன் ஆகியோர் முறியடித்துள்ளனர். 2 விக்கெட்டுகளை இழந்து 13 ஓட்டங்கள் எடுத்து தடுமாறிய இங்கிலாந்தை ஸ்டோக்ஸ் - மாலன் ஜோடி மீட்டு மூன்றாவது விக்கெட்டுக்கு 201 ஓட்டங்கள் சேர்த்தனர்.

2023இல் அடிக்கப்பட்ட 63 சதங்களில் 12 ஆவது அதிவேக சதத்தை அடித்த பென் ஸ்டோக்ஸ், ஒரு நாள் போட்டிகளில் இங்கிலாந்து அணி சார்பில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற மற்றொரு சாதனையும் புரிந்தார்.

இதற்கு முன்னர் ஜேசன் ராய் அடித்த 180 ஓட்டங்களே, இங்கிலாந்து வீரர் ஒருவர் அடித்த தனிப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கையாக இருந்தது.

நியூஸிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 187 ஓட்டங்கள் எடுத்தது 181 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. ■

# ஆண்கள் ஆசியக் கிண்ணத்தில் முதன் முறையாக பெண் நடுவர்கள்



கட்டாரில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஆடவர் ஆசியக் கிண்ணப் போட்டியில் ஜப்பானிய வீராங்கனை யோஷிமி, யமாஷிதா உள்ளிட்ட பெண்கள் நடுவராக இருப்பார்கள் என்று அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

2022 ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெற்றும் ஆண்கள் உலகக் கிண்ணப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட யமாஷிதா, ஜனவரி-பெப்ரவரியில் நடைபெறும் பிராந்திய சம்பியன்ஷிப்பிற்காக மற்ற நான்கு பெண்களுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். வீடியோ அசிஸ்டென்ட் ரெஃப்ரி (VAR) அமைப்பும் போட்டியில் "முழு அறிமுகமாக" இருக்கும் என்று AFC தெரிவித்துள்ளது. ஆசியக் கிண்ணப் போட்டியில் கோப்பையில் முதன்முறையாக 24 அணிகள் பங்கேற்கின்றன, போட்டியை நடத்தும் கட்டார் நடப்பு சாம்பியனாகும். ■

# செவிப்புலனற்றவர்களின் விளையாட்டுப் போட்டி

வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்கத்தின் 10 ஆவது விளையாட்டு விழா கடந்த வாரம் வதிரி டைமன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. வடமராட்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவற்றின் செவிப்புலனற்ற சுமார் 75 வீர, வீராங்கனைகள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றினர்.

உதைபந்தாட்டம், கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் ஆகியன மூன்று நாட்களாக நடைபெற்றன. வெற்றியடைந்தவர்கள் தமது இரண்டு கைகளையும் உயர்த்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். எதிரணியை அவமானப்படுத்தும் ஆக்ரோஷம் எவையும் அங்கு இருக்கவில்லை. மிக அமைதியாகவும் நேர்த்தியாகவும் அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

பரிசளிப்புவிழா மிகவும் நேர்த்தியாக நடத்தப்பட்டது. பரிசுக்குரியவரின் பெயர் அறிவிக்கப்பட்டதும் தாமதமின்றி மேடைக்குச் சென்று பரிசைப் பெற்றுக்கொண்டனர். பரிசளிப்பு விழா சர்வதேச தரத்துக்கு அமைவாக நடத்தப்பட்டது. ஆட்ட நாயகன், தொடர் நாயகன் அதிக கோல் அடித்தவர், சிறந்த கோல் கீப்பர், அதிக ஓட்டங்கள் அடித்தவர், அதிக சிக்ஸர்கள் அடித்தவர், அதிக பவுண்டரிகள் அடித்தவர் என உதைபந்தாட்ட, கிரிக்கெட் போட்டிகளின் விருதுகள் வழங்கப்பட்டன.

உதைபந்தாட்டத்தில் வடமராட்சியை எதிர்த்து விளையாடிய மட்டக்களப்பு சம்பியனானது. வடமராட்சியை எதிர்த்து விளையாடிய வவுனியா கிரிக்கெட்டில் சம்பியனாகியது.

வடமராட்சி செவிப்புலனற்றவர்களின் பேச்சையும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்களின் உரைகளையும் மொழிபெயர்ப்பதற்கு செவிப்புலனற்றவர்களின் சைகை தெரிந்த மூவர் வந்திருந்தனர். இங்கிலாந்து, ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளில் வசிக்கும் செவிப்புலனற்றவர்கள் இந்த விளையாட்டுப் போட்டிக்கான அனுசரணையை வழங்கினர். சுவிற்சர்லாந்தில் வசிக்கும் முல்லைத் தீவைச் சேர்ந்தசெவிப்புலனற்ற ஒருவர் விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மூன்று நாட்களும் உடனுக்குடன் குப்பைகளையும் கழிவுகளையும் அப்புறப்படுத்தினார்கள். ■





இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 16.09.2023 அன்று வெளியிடப்பட்டது.